No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 15—No. 1.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் 15 | விஷு ஆண்டு தைத் திங்கள் 1942ஆம் ஜனவரிமீ | இதழ் 1 |
|---|---|---|

உள்ளுரை — பக்கம்

திறப்புரை ... 1
வரவேற்புரை ... 6
நல்வரவேற்புக் கவி ... 10
முப்பத்தாறாவது ஆண்டு அறிக்கை ... 12
நல்வரவேற்புப் பா ... 19
சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைமையுரை ... 22
சைவ இளைஞர் மகாநாட்டுத் திறப்புரை ... 33
சமாஜ முப்பத்தாறாம் ஆண்டு விழா ... 39
தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 58-ம் ஆண்டு நிறைவுவிழா நிகழ்ச்சி ... 44

...ர் : திரு. வி. உலகநாத முதலியார்

...த்தாந்த மகாசமாஜம்
...ல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

1942 தனிப் பிரதி அணா 4.

சிவமயம்

# சமாஜ அறிக்கைகள்

1. நமது சமாஜப் போஷக உறுப்பினரும் பெங்களூர் குகன் பிரஸ் அதிபருமாகிய சைவத் திருவாளர் - ஆ. அ. இரத்தினசபாபதி முதலியார் அவர்களுடைய மூத்த புதல்வன் திருநிறை செல்வன் - அண்ணாமலை நம்பிக்கும், காஞ்சிபுரம் - திரு. V. K. R. ஸ்ரீநிவாஸ முதலியார் புதல்வி திருவளர் செல்வி - சரோஜினி நங்கைக்கும் 23-1-42 வெள்ளிக்கிழமை யன்று பெங்களூரில் திருமணம் நடைபெறும்.

2. நமது சமாஜ ஆயுள் உறுப்பினரும் திரிசிராப்பள்ளி வட்டத்து நகர நாட்டாண்மைக் கழக உதவி மேற்பார்வையாளருமாகிய சைவத் திருவாளர் - K. அரங்கசாமி முதலியார் அவர்கள் மூத்த புதல்வி சிவஞானச் செல்வி - காமாக்ஷியம்மையார், பி. ஏ., அவர்கட்கும், விசாகபட்டினம் - மருத்துவக் கல்லூரி ஆசிரியர் - திருமிகு - அ. குமாரசுவாமி முதலியார், M. B., B. S., L. O., அவர்கட்கும் 6-2-1942 வெள்ளிக்கிழமை யன்று திரிசிராப்பள்ளியில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமுன்பு திருமணம் நடைபெறும்.

இவ்விரு திருமணங்கட்கும் சமாஜத்தினர் அனைவரும் அன்போடு இவ்வறிக்கைமூலம் அழைக்கப்படுகின்றனர்; தங்கள் ஆசீர்வாத மொழிகளை நேரிலோ கடிதவாயிலாகவோ மணமக்கள் பெற்றோர்கட்குத் தெரிவிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

3. நமது சமாஜமும் சென்னை வேதாந்த சங்கமும் சேர்ந்து சைவத் திருவாளர் - பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியார் அவர்களுடைய மணிவிழாவைக் கொண்டாடும் முறையில் "சிந்தாமணி மகாநாடு" என்ற சொற்பொழிவுத் தொடர்ச்சியை சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் 9-1-1942 முதல் நான்கு நாட்களில் நடத்தும். ஒவ்வோர் இலம்பகத்தைப்பற்றியும் ஒரு புலவர் விரிவுரை நிகழ்த்துவர். பண்டிதமணியவர்கள் சென்னைக்கு விஜயம் செய்து தலைமை வகித்தும் சொற்பொழிவாற்றியும் இம் மகாநாட்டிற் கலந்து கொள்ள அன்போடு இசைந்துள்ளார்கள்.

Reg. M. 2330

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோ னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.

| மலர் 15 | விஷு ஆண்டு தைத் திங்கள் 1942ஆம் ஜனவரிமீ | இதழ் 1 |
|---|---|---|

சைவ சித்தாந்த மகா சமாஜம்

## 36-வது ஆண்டு நிறைவு விழா, திரிசிராப்பள்ளி

# திறப்புரை

[ராவ்பகதூர் - சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார்]

தாயு மாய்எனக் கேதலை கண்ணுமாய்
பேய னேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாய னார்என நம்வினை நாசமே.

திருச்சிற்றம்பலம்

மெய்யன்பர்களே,

இன்று நடக்கும் இச்சைவ சித்தாந்த மகா சமாஜக் கூட்டம் முப்பத்தாறுவது ஆண்டுக் கூட்டமாகும். முப்பத்தாறு என்ற எண் ஒரு சிறந்த எண் ஆகும். தத்துவங்கள் முப்பத்தாறு என்பர். ஏனைய சமயங்கள் முப்பத்தாறுக்குக் குறைவான தத்துவங்களைத் தான் கொண்டிருக்கின்றன. ஆனால் மிக உன்னத நிலைமை கொண்ட சைவ சமயமோ முப்பத்தாறு தத்துவங்களையும் கொண்ட ஒப்பற்ற ஒரு நிலை

பெற்றிருக்கின்றது. ஆகவே முப்பத்தாறு என்ற எண்ணைக் கொண்டு முப்பத்தாறு ஆண்டுகள்வரை சைவத்தைப் பரப்பி வந்த இந்தச் சமாஜத்தின் சிறப்பு இவ்வாண்டிலே ஒப்பற்ற பெருமை வாய்ந்திருக்கின்றது. அவ்விதப் பெருமை வாய்ந்த இக்கூட்டத்தை நான் திறந்து வைப்பதென்றால் தகுதியற்ற எனக்கு ஒரு பெருத்த பளுவைக் கொடுத்ததாகும். இதனை ஒரு சிறப்பு எனக்கொண்டால் அது எனக்கு உரித்தானதல்ல. அது நான் வேலை பார்க்கும் அறநெறிக் கழகத்திற்கே உரித்தாகும். அக்கழகத்தாரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஒரு சிறிதாவது பாடுபடும் பட்சத்தில் அவர்களுடைய கடமையைச் செலுத்துகிறார்களே தவிர பிறிதொன்றும் இல்லை என்று உறுதியாகவும், தெளிவாகவும் சொல்ல முடியும்.

சென்ற 36 ஆண்டுகளாகச் சைவ சித்தாந்த மகா சமாஜம் எத்தனையோ நற்காரியங்கள் செய்ய முயன்றிருக்கின்றது. ஆண்டுதோறும் இதைப்போன்ற கூட்டங்களைக் கூட்டிச் சமயத்திலும் கல்வியிலும் தேர்ந்தவர்களைக் கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்திச் சமயப் பிரசாரம் செய்து வந்திருக்கின்றது. 'சித்தாந்தம்' என்னும் சிறந்த பத்திரிகையின் வாயிலாகச் சைவக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பி வருகின்றது. சைவ நூல்களையும் மற்ற இலக்கிய நூல்களையும் அடக்கவிலைப் பதிப்புக்களாக வெளியிட்டு ஒவ்வொரு சைவ இல்லத்திலும் நூல்கள் சென்று பயன்செய்யும் பொருட்டு ஏற்பாடு செய்திருக்கின்றது. மாணவர்கள், புலவர்கள் முதலியவர்களுக்குச் சமயப் பயிற்சி கொடுப்பதற்காகச் சமயத் தேர்தல்களை வைத்துப் பத்திரங்களும் பரிசுகளும் கொடுத்து உதவுகின்றது. சென்னையிலே அன்றி வெளிநாட்டுக் கழகங்களிலும் நடந்துவரும் சைவ இயக்கங்களைப் பற்றி அடிக்கடி வெளியிட்டு வருகின்றது. ஆலயத் திருவிழாக்களில் சைவப் பிரசாரம் செய்வதற்காகக் கூட்டங்களைக் கூட்டி நடத்தி வருகின்றது. இது காறும் 36 ஆண்டுகள்வரை சமாஜம் செய்துவரும் தத்துவ ஆராய்ச்சிகளிலே ஸ்தூல ரூபமாகச் செய்த செயல்கள் மேற்சொன்னவை யாகும். சமாஜத்தைச்

சார்ந்த தனி அன்பர்கள் தங்கள் தங்கள் சொந்த நிலைமையில் தத்துவங்களை ஆராய்ச்சி செய்தும் அதன் பயன்களை அறிந்தும் அறிவித்தும் இருக்கிறார்கள். அதைப் பற்றிக் கூட்டங்களில் ஆராய வேண்டிய நியதி இல்லை. சமாஜத்தின் உதவியினால்தான் அப்படிப்பட்ட தனி ஆராய்ச்சிகளும் நடைபெறலாம் என்று மாத்திரம் இங்கே கூறிக் கொள்ளுவோம்.

இனி, தற்காலத்திற்கேற்றபடி நம் சமாஜமானது தன் நற்செயல்களை அதிகரிப்பதற்காக என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி ஒரு சிறிது ஆராய்வோமாக. ஆண்டுதோறும் நடைபெறும் கூட்டங்களின் நடவடிக்கைச் சுருக்கம் சித்தாந்தத்தில் வெளியாகிறது. மேலும் சில தலைமையுரைகளும் வெளியாகின்றன. ஆனால் கூட்டத்தின் முழுநடவடிக்கைகளும் சொற்பொழிவாளரின் முழுக்கருத்துக்களும் வெளியாவதில்லை. தேசீய சபை போன்ற சபைகளிலே அவ்விதமான வெளியீடுகள் புத்தக ரூபமாக வெளிவருவதை நாம் அறிவோம். நமது கூட்டங்களிலும் அவ்வாறே வெளியீடுகள் வருவது ஒரு சிறந்த பயனைத்தருவதாகும். சமீபத்தில் தருமபுரத்தில் நடந்த மெய்கண்டான் மகா நாட்டின் வெளியீட்டுப் பிரசுரத்தை ஒரு எடுத்துக் காட்டாக இங்கே கொள்வோமாக.

இதுவரை அடக்க விலையில் 12 திருமுறைகள், 14 சாத்திரங்கள், திருப்புகழ், சங்கநூல் முதலிய பல நூல்களை வெளியிட்டிருக்கின்றோம். ஆனால் அவைகளுள் பெரும்பாலானவை மூலம் மாத்திரம் கொண்டவையாகும். தற்காலத்திற்கு ஏற்றபடி உரைகளை எழுதி வெளியிடுவது மிக்க பயனைத்தரும் என்று பலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். பொறுக்கி எடுத்த செய்யுள்களுக்காவது உரைகளை எழுதி வெளியிடுவது ஒரு சிறந்த செயலாகும்.

சைவம் மிகப் பண்டைய சமயம் என்று எல்லாரும் அறிவோம். ஆனால் அதனுடைய கொள்கைகள் தென்னாட்டிலேதான் சிறந்து விளங்குகின்றன. வடநாட்டாரும் அவைகளைச் செவ்வையாக அறிந்ததாகத் தெரியவில்லை. ஆகவே பிறமொழிகளிலே சித்தாந்த நூல்களை மொழிபெயர்ப்பது அவசியம் எனத் தோன்றும். முக்கியமாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டியது முதல் கடமை. இதுவரை ஒரு சில நூல்களே ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகளும் இப்பொழுது கிடைப்பதில்லை. ஆகவே ஆங்கில வெளியீடுகள் மிக அவசியம். வடநாட்டுப் பிரசுரங்களில் சைவக் கட்டுரைகள் அடிக்கடி வெளிவருவதற்கு முயலவேண்டும். இவ்விதம் செய்தால் வடநாட்டில் சைவம் பரவுவதோடு வெளிநாடுகளிலும் பரவும். அதற்குரிய பிரசாரகர்களை ஏற்படுத்துவதும் நல்லதுதான். ஆனால் நம் சமாஜத்தின் செல்வநிலை அத்தொழிலை எடுத்தாளுவதற்குப்போதிய அளவில் இப்போது இல்லை. அதனைப் பிற்காலத்து நிகழ்ச்சிமுறைக்கு விட்டுவிடலாம்.

ஆலயங்களில் நூல் நிலையங்கள் இருக்க வேண்டியது அவசியம். அதனைப்பற்றி அடிக்கடி பேசிக்கொண்டு வருகின்றோம். சில ஆலயங்களில் அதனைப் போற்றி வருகின்றார்கள். மற்றும் உள்ள ஆலயங்களும் இதனைப் போற்றி வந்தால் சைவமும் தமிழும் தழைத்து ஓங்குவதில் என்ன ஐயம்? மேலும் ஆலயங்களில் திருப்பதிகங்களை ஓதுவதற்காக ஓதுவார்கள் இருக்கின்றார்கள். ஆனால் பல ஆலயங்களில் ஓதுவது கிடையாது. இதனைப் புதுப்பிப்பதற்காக முயற்சி நடந்து வருகின்றது. அதற்குச் சைவ மக்களுடைய ஒத்தாசை வேண்டும். தேர்ந்தெடுத்த ஓதுவார்கள் கிடைப்பராயின் அந்தந்த ஊர்களில் சிறுவர் சிறுமிகளுக்குச் சமய

இசைப் பயிற்சியும் தரமுடியும். இதற்கும் பொது மக்களின் கூட்டுறவு மிகவும் அவசியம்.

சமாஜத்தில் மாணவர்களுக்கும் புலவர்களுக்கும் தேர்தல் வைத்துப் பரிசுகள் தந்துவருவதை முன்னமே கூறினேன். ஆனால் இவ்வியக்கத்தில் மிகச்சிலரே ஈடுபட்டு அதன் பயனை அடைகின்றனர். நம்நாட்டில் குறைந்தது 338 உயர்தரப் பாடசாலைகள் உண்டு. இவைகளிலே ஈடுபடும் பண்டிதர்களோ சுமார் 580 பேர் இருப்பார்கள்.* இவர்களிலே ஒவ்வொரு வரும் ஆண்டுக்கு ஒரு பிள்ளைக்காவது பாடம் கற்பித்துத் தேர்தலுக்கு அனுப்பினால் எவ்வளவு பேர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் சமயக்கல்வியில் தேர்ச்சி பெறுவார்கள்? இம் முறையை நம் பண்டிதர்கள் கையாண்டால் இதைவிடச் சைவத்திற்கு அவர்கள் செய்யக்கூடிய நற்செயல் வேறொன் றும் இல்லை.

நம் நாட்டில் அநேக ஊர்களிலே சைவ சபைகள் இருக் கின்றன. அவைகள் பல நல்ல வேலைகளும் செய்து வருகின் றன. ஆனால் அவ்வேலைகளைப் பற்றிய குறிப்புகள் வெளிவருவ தில்லை. ஏனைய சமயத்தார்கள் அவரவர்களுடைய வேலைகளைக் கணக்கெடுத்து வெளியிடுகிறார்கள். அதனாலே உலகத்தில் பெருத்த பிரசாரம் ஏற்படுகின்றது. சைவச் சபைகளிலோ அவ்வியக்கம் கிடையாது. வெளிச்சங்கங்கள் சென்னைச் சமா ஜத்தோடு இணைத்துக் கொண்டு தத்தம் வேலைத் திட்டங்களை யும் நடவடிக்கைகளையும் சமாஜ அமைச்சருக்குத் தெரியப் படுத்தினால் அதுவே ஒரு சிறந்த செயலாகும். அப்போது

*தமிழ்நாட்டில் உயர்தர கலாசாலைகள் (High Schools) ஆண்களுக்கு 209, பெண்களுக்கு 33; நடுத்தர கலாசாலைகள் (Middle & Higher Elementary Schools) ஆண்களுக்கு 71, பெண்களுக்கு 25 ஆக 338-தமிழாசிரியர்கள் உயர்தர கலா சாலைகளில் 484, நடுத்தர கலாசாலைகளில் 96 ஆக 580 பேர்கள்.

சமாஜம் செய்யக்கூடிய வேலை சிறந்து விளங்கும். சங்கங்கள் இல்லாத இடங்களை அறிந்து அங்கே கிளைச் சங்கங்களை ஏற்படுத்த முடியும். இக்கைங்கரியத்திற்கு மாகாணச் சங்கங்கள் உதவி புரியுமாக!

மேலே சமாஜம் செய்யக் கூடிய சில திட்டங்களைப் பற்றிச் சொன்னேன். இவைகளைச் செயலாளர்களின் கூட்டத்தார் ஆராய்ந்து உறுதியான முடிவுகளுக்கு வருவார்களாக. இக்கூட்டம் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளின் தலைமையின் கீழ் நடைபெறும் சிறப்பைக் கொண்டிருக்கிறது. அப்பெரியார் அவர்களின் ஒப்பற்ற உரைகளை இங்கே குழுமி இருக்கும் மெய்யன்பர்களாகிய நீங்கள் கேட்டு ஆனந்திக்கப்போகிறீர்கள். இது திரிசிராப்பள்ளி செய்த ஒரு தவப் பயனாகும். இந்த மகத்தான சமயத்தில் என்னையும் ஒரு பொருட்டாக எண்ணி இக்கூட்டத்தைத் திறந்து வைக்கும் ஒரு கடப்பாட்டை எனக்குத் தந்ததற்காகச் சமாஜத்தார்க்கும், இந்த மகாநாட்டு வரவேற்புக் கழகத்தார்க்கும், பொதுவாகச் சைவ மக்கள் எல்லார்க்கும் என்னுடைய நன்றியைத் தெரியப் படுத்தி இச்சைவக் கூட்டம் நன்றாக நடைபெற்றுப் பயன்தருமாறு இதனைத் திறந்து வைக்கின்றேன். சைவம் வாழ்க. தமிழ் வாழ்க. மக்கள் வாழ்க.

அரிச்சி ராப்பக லைவரா லாட்டுண்டு
சுரிச்சி ராதுநெஞ் சேயொன்று சொல்லக்கேள்
திரிச்சி ராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சி ராது நடக்கும் நடக்குமே.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

## 36-வது ஆண்டு நிறைவு விழா, திரிசிராப்பள்ளி

# வரவேற்புரை

பெருவளநல்லூர்

**திரு. ராவ்சாகிப் - P. B. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள்**

வரவேற்புக் கழகத் தலைவர்

**ஸ்ரீலஸ்ரீ குரு சுவாமிகளே! அறிவிலும் அன்பிலும் சிறந்து விளங்கும் நங்கைமார்களே! நம்பிமார்களே!**

இங்கு குழுமியுள்ளார் எல்லோரையும் மிகுந்த அன்புடன் வரவேற்கும் பேறு பெற்றுள்ளேன். இத்தகைய பேறு எளிதில் வாய்ப்பது அன்று. 32 ஆண்டுகட்கு முன்னர் இந்நகர மாந்தர்கட்கு இப்பேறு வாய்த்தது. அதற்குப் பின்னர் இப்பொழுது தான் நேர்ந்துள்ளது. இஃதும் பெரு முயற்சியின்றி நேர்ந்தது என்றே கூறலாம். கைகால் இன்றி முடம்பட்டவன் வாயில் தேன் பிலிற்றியதைப்போல எங்கட்குப் பெறுவதற்கரிய இப்பேறு நேர்ந்தது என்றே கூறலாம்.

ஆன்மாக்களின் அஞ்ஞான இருளைப்போக்க அவதரித்த ஞானபானுவாகிய பரமாசாரிய சுவாமிகளே! தங்களை இன்று இங்கு வரவேற்பதில் எங்கட்கு எவ்வளவு மகிழ்ச்சியுண்டு என்று நாங்கள் விரிவாகக் கூறவேண்டுவதில்லை. தங்கட்கு இந்நகரமும் இந்நகரைச் சூழ்ந்துள்ள இடங்களும் புதியன அல்ல. இப்பொழுது தாங்கள் விஜயம் செய்வது ஏழாவது

முறையாகும். ஒவ்வொரு முறையும் எங்கள் வேண்டு கோட்கு இணங்கி இந்நகரில் எவ்வளவு காலம் தங்கி எவ்வளவு ஞான மழையைப் பொழிந்தீர்கள் என்பதை யாவரே இயம்பவல்லுனர்! தாங்கள் பெய்த ஞான மழையாலேயே இப்பொழுது இந்தச் சமாஜம் இங்கு கூடநேர்ந்துள்ளது என்றால் அது மிகையாகாது. இதற்கு முன்பெல்லாம் வேறு வேறு காரணங்களால் தாங்கள் இங்கு விஜயம் செய்தாலும் இப்பொழுது ஏற்பட்டுள்ள விஜயம் மிக விசேடமுடையது ஆகும். மாகாண சபையாக உள்ள சமாஜத்துக்குத் தலைமை தாங்கும் பொருட்டுத் தாங்கள் இங்கு விஜயம் செய்தது மிகச் சிறப்புடையதேயாகும். சமாஜத்துக்குத் தலைமை தாங்குதல் தங்கட்குப் புதுமையன்று என்பதை நாங்கள் அறிவோம். சமாஜம் தங்கள் மடத்திற் பிறந்த குழந்தையன்றே! அப்பொழு தப்பொழுது தனயன் வளர்ச்சியை நோக்குவது தந்தையின் இயல்பே. வேலூரிற்கண்டு இறும்பூது எய்தினீர்கள். கடலூரிற் கண்டு களிப்புற்றீர்கள். பாதிரிப்புலியூரில் பார்த்துப் பரவசமுற்றீர்கள். புதுவையிற் கண்டு புளகாங்கிதமுற்றீர்கள். வெண்ணெய்நல்லூரில் கண்டு வியப்புற்றீர்கள். இப்பொழுது தாயான செல்வர்க்குரிய இத்தலத்தில் எழுந்தருளி தனயன் பெருமிதத்தை எல்லாம் பார்த்து உவந்து தலையணி செய்யக் கருத்துக் கொண்டுள்ளீர்கள். தங்கள் வரவு நல்வரவு ஆகுக. தாங்கள் வழங்க நிற்கும் வாய்மையொடு பொருந்திய அறவுரைகளை எல்லாம் செவிமடுத்துச் சிந்தை மாசகற்றிச் சிறப்புறுவோமாக.

**தெய்வத் தமிழையும் உய்வைத்தரும் சைவத்தையும் போற்றும் புலவீர்!**

உங்கள் வரவு நல்வரவு ஆகுக. தொன்றுதொட்டுப் பல புலவர்கள் வதிந்து வாழ்ந்த இந்நகரிற்குத் தாங்கள் வருவதற்கு எவ்வகையான உரிமைகளும் உண்டு. புலவர்கள்

வதிந்த இடம் உங்கள் இடமன்றோ? தமிழுக்கும் சைவத்துக்கும் நீங்கள் ஆற்றிவரும் உபகாரச் செயல்களை உன்னிணுல் அவைகளுக்குக் கைம்மாறும் உளவோ? இப்பேரவையின்கண் பல இடங்களிலும் இருந்து நீங்கள் விஜயம்செய்து சிறப்பிக்க நேர்ந்தமைக்கு நாங்கள் எவ்வாறு நன்றிகூறக் கூடும்? உங்கள் வரவு நல்வரவு ஆகுக. உங்கள் வாய்மொழிகள் கேட்பார்க்குத் தெளிவையும் திட்பத்தையும் உண்டாக்குவன ஆகுக.

**இசைமணியாக விளங்கும் ஏந்தால்!**

மனதிற்கு அமைதியையும் அன்பையும் உண்டாக்குவது இசையே யன்றோ! அவ்விசையினும் மறையிசை மாண்புடையதாகும். அம்மறையிசையை யாவர் மனத்திலும் பதியும் வண்ணம் மறைவின்றி ஓதும் தங்களை மிக்க மகிழ்வோடு வரவேற்கின்றோம். தங்களை இசை ரூபமாகப் பாய்ச்சும் நீரானது சிவமெனும் மென்முளை தோன்ற உதவுவது ஆகுக.

**இங்கு குழுமியிருக்கும் அறிவிலும் அன்பிலும் சிறந்து விளங்கும் பெரியீர்!**

உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன் என்று கூறுவது மிகையாகும். உங்கள் பிரதிநிதியாக நின்று நான் பேசுகிறேன் என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். உங்களுடைய பலவகையான ஆதரவுகளும், அன்பிற்குரிய முயற்சிகளும் இல்லையேல் நாம் இங்கு எவ்வாறு கூடி இவ்விழாவை நடத்த இயலும்? ஆதலால் உங்களுடைய பேராதரவை மிகவும் போற்றுகின்றேன். மீண்டும் ஒருமுறை இங்கு எழுந்தருளியுள்ள எல்லோரையும் மிக்க மகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவ சித்தாந்த மகா சமாஜம்

## 36-வது ஆண்டு நிறைவு விழா, திரிசிராப்பள்ளி

அக்கிராசனுதிபதி

திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர்

ஸ்ரீ மத் ஞானியார் மடாலயத் தலைவர்

ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்

# நல்வரவேற்புக் கவி

ஆசிரிய விருத்தம்

தேனமர்பூம் பொழிலுடுத்த மணிமாட நிறைவீதி திகழ்மெய்ஞ் ஞான, தானவள்ள லெனுஞ்சிறந்த செவ்வந்தி நகர்வருநற் ருயு மானுர், ஆனதொரு சொற்சுவையும் பொருட்சுவையு நனிபெருக வழகாய்ச் சொற்ற, வானமழை பொழிகருணைக் கிடமாகு மப்பதிக்கு மாண்ப! வாரீர். க

வேயுளமர் வணிகநங்கை வயாவின்போ துளமடங்கா விருப்பிற் கேற்பத், தாயுமுட னிருப்பதொக்க மருத்துவஞ் செய் தருள்புரிந்த தன்மை யோடும், ஆயுமறை மின்சார முனிவரர்க்குக் கிருபைபுரி யன்பின் மேலாம், தாயுமா னவர்கோயி லமர்ந்ததிரி சிரபுரத்துத் தக்கோ ரேத்தும். உ

மன்னுபுகழ் மகாவித்து வானெனுஞ்சொற் குபகார மாய் விளங்கும், பன்னரிய பசியதமிழ்க் கடல்கடந்த நிபுண னெனப் பகர்வ தான, என்னவு நூல் பயனளிக்கும் படினமிக நன்கியற்றி யெழில்பெற் ரேங்கத், துன்னுதிரி சிரபுரநன் மீனுட்சி சுந்தரனற் ருேன்றற் காணே. ந

ஆற்றுக்கால் நிறைபண்ணை காவிரியின் வயப்பெருக்கா லடைவே நல்கும், ஊற்றுக்கால் தொறுஞ்சென்று செஞ்

சாலி மிகவளர்க்கு முயர்சோ ணாட்டில், நாற்றுக்கால் முடி நடுவார் பள்ளியினும் தெள்ளியதாய் நாடுந் தெய்வ, நூற்றுக்கால் மண்டபத்து வளர்சைவ சித்தாந்த நுவல்ச பைக்கு. ௪

சிறந்தசிவ சமயநெறி பிறழாத வாய்மையினைத் தெளியு மாறு, கறந்தபாற் கன்னலொடு நன்கூட்டுந் தன்மை யைப்போற் கலந்தின் பார்க்கும், துறந்தவருஞ் செவிமடுத்து நன்மைகடைப் பிடித்தொழுகத் துணைசெய் யான்றோய்! மறந்துங்கை விடாதவர்சூழ் சபைநாப்பண் தலைமையுற மகிப! வாரீர். ௫

ஒப்பாரு மிக்காரு மிலாதொளிரு மேன்மைதவழ் உல கம் போற்றத், தப்பாதிங் கடியவருக் குரியவிசு வாசமொடு தாங்கு மெய்ம்மை, முப்பானூ றூண்டுநிறை விழாச்சபா நாயகராய் முகம லர்ந்த, செப்பாருஞ் சொற்பொழிவை மிக வழகாய் நிறைவேற்றத் தேவ! வாரீர். ௬

உலகமகிழ் சுத்தாத்து விதசைவ சித்தாந்த சமாசமதிங் கோங்கி முற்றும், நலமடையச் செயற்கரிய செயலனைத்து நாளடைவில் நலங்கி ளர்மெய், நிலவவரும் படிக்கான முறைமையினைச் செய்துவரு நேர்மைத் தாய, பலகலைதேர் நின்வரவே பெரிதெனக்கொண் டகமகிழப் பரம! வாரீர். ௭

நற்றிருப்பா திரிப்புலியூர் ஞானியார் மடாலயத்து நாய கம்பூண், டுற்றுதமிழ் தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க வுழுவ லன்பாற், சொற்றமகிழ் வெய்திடச்செந் தமிழ்நாடெங் கணும்பரவத் துணையாய் நிற்கப், பெற்றசிவ சண்முகமெய்ஞ் ஞானசிவா சாரியராம் பெரும! வாரீர். ௮

**வாழ்த்து வெண்பா**

மன்னியசுத் தாத்துவித மாண்புறுஞ்சித் தாந்தசபை
துன்னு திருத்தொண்டர் தூயதமிழ்—முன்னவனும்
அண்ணல்மா மனுநீ றக்கமணி யாதியவும்
நண் ணும் படிவாழ்க நன்கு. ௯

---

சமாஜப் போஷகரிலொருவராகிய பண்டிதரத்தினம் - குகஸ்ரீ - புலவர் - திருநாவுக்கரசு முதலியார் இயற்றியது.

உ

சிவமயம்

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

# முப்பத்தாறுவது ஆண்டு அறிக்கை

இச்சமாஜம் 1905 ஆு ஜூலைமீ 7 உ திருப்பாதிரிப் புலியூரில் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் திருமடத்தில் இங்கு தலைமை வீற்றிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் திருமுன்பு நிறுவப்பெற்று 1915 ஆு டிசம்பர்மீ 11உ சபைப்பதிவுச் சட்டப்படி பதிவு செய்யப் பட்டது. இச்சமாஜத்தின் நோக்கம் சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் பரவச் செய்தலேயாம். இந்நோக்கம் முற்றுப் பெறுதற்குப் பல முறைகள் கையாளப்பட்டு வரு கின்றன. அவற்றுட் சில, கூட்டங்களை நடத்துதல், நூல்களை வெளியிடுதல், பத்திரிகை பிரசுரித்தல் முதலியனவாகும். சமாஜத்தின் பொருள்நிலை, தொண்டர்களின் ஊக்கம், பொது மக்களின் ஆர்வம் முதலியவைகட் கேற்பத் தொண்டு நடை பெற்று வருகிறது.

## திருமுறை வெளியீடு

இச்சமாஜம் தோன்றிய நாள்தொட்டு இருபது ஆண்டு கள் வரையில் "சித்தாந்தம்" பத்திரிகை (பழைய தொகுதி) நடத்துதல், துண்டுப்பிரசுரங்கள் மூலம் சமயப் பிரசாரம் செய்தல், வகுப்புக்கள் கூட்டங்கள் பெரியார் திருநாட்கள் முதலியவற்றை நடத்திச் சமயபோதனை செய்தல், ஆண்டு விழாப் பேரவை கூட்டுதல் முதலிய வழிகளில் தொண்டு

புரிந்துவந்தது. பிறகு 1929 ஆம் திருநெல்வேலியில் நடந்த சைவப் பெரியார் தனிக்கூட்டத்திலும் திருப்பாதிரிப்புலியூரில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் பேராதரவில் நடந்த சைவர் மகாநாட்டிலும் பன்னிரு திருமுறைகளையும் பதினன்கு சாத்திரங்களையும் பிற சமய நூல்களையும் நமது சமாஜம் அடக்கவிலைக்கு அச்சிட்டு வழங்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கேற்ப 1929 ஆம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் 10,000 பிரதிகள், 1930ஆம் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் 5000 பிரதிகள், 1931 ஆம் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம் 3000 பிரதிகள், 1932 ஆம் திருவாசகம் திருக்கோவையார் திருவிசைப்பா திருப்பல்லாண்டு 1000 பிரதிகள், திருவாசக மூலம் 1000 பிரதிகள், மெய்கண்டாரும் சிவஞான போதமும் என்ற ஆராய்ச்சிநூல் 1000 பிரதிகள், 1933 ஆம் திருவாசகவுரை 1000 பிரதிகள் திருமந்திரம் 1000 பிரதிகள், பதினோராந் திருமுறை 1000 பிரதிகள், 1934 ஆம் பெரியபுராணம் 1000 பிரதிகள், பதினன்கு சாத்திரம் மூலமும் உரையும் 1000 பிரதிகள் வெளியிடப்பட்டன. பிறகு 1935 ஆம் முதல் இற்றைவரை பன்னிரு திருமுறைகள் பதினன்கு சாத்திரங்கள் இரண்டாம் பதிப்பாகவும், தலயாத்திரைப்படம் விளக்கம், சங்கநூற்புலவர் அகராதி, சங்க இலக்கியம், சீவக சிந்தாமணி முதலிய பல நூல்களும், திருமுருகாற்றுப்படை உரை, திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சியுரை, சிவகுமாரர்கள் தேவாரம், தோத்திரத் தேவாரத்திரட்டு முதலிய சிறு நூல்களும் வெளிவந்துள்ளன.

இவ்வெளியீடுகளின் பயன் பல்லாயிர மக்கள் இல்லங்களில் சைவ மணமும் தமிழ் மணமும் கமழும்படிச் செய்வதென்று அறிஞர் பலர் கூறுகின்றனர்.

## சைவத் தேர்வுகள்

பல ஆண்டுகட்கு முன்பு நமது சமாஜம் சாத்திரப் பரீக்ஷை நடத்திற்று. இடையில் இது நின்றுவிட்டு மீண்டும் புதிய முறையில் 1934ஆம் தொடங்கி இளஞ் சைவப் புலவர், சைவப் புலவர் என்ற பட்டங்களை வழங்குவதற்குரிய தேர்வுகளை நடத்தி வருகிறது. இவ்வாண்டில் பதினொருவர் விண்ணப்பித்தனர், எண்மர் பரீக்ஷைக்கு வந்து விடையெழுதினர், ஐவர் தேறி விட்டனர். இவர்கட்குரிய பட்டங்கள் இவ்விழாவில் நாளை வழங்கப்படும். இத்தேர்வுகளை நடத்துவதின் நோக்கம் சைவ இளைஞர்கட்குச் சாத்திர ஞானப்பயிற்சி உண்டாக்குவதேயாம். உயர்தரகலாசாலைகளிலுள்ள சுமார் ஐந்நூறு தமிழாசிரியர்கள் சிறிது ஊக்கத்தோடு மாணவர்கட்கு ஓய்வு நேரங்களில் இத்தேர்வுகட்குரிய பாடங்களைக் கற்பித்துத் தலைக்கொருவர் வீதமாக ஐந்நூறு இளைஞர்களை ஆண்டுதோறும் இத்தேர்வுகட்கு அனுப்ப மனங்கொள்ளவில்லையே யென்று நமது சமாஜம் வருந்துகின்றது.

## சென்னை இந்து சமய நிலையப் பாதுகாப்புக் கழகம்

பதினைந்து ஆண்டுகளாகத் தொண்டாற்றிவரும் இக்கழகம் இப்போது சிறந்த பலசெயல் முறைகளைக் கையாண்டு வருவது நமது சமாஜத்துக்கு நிரம்பவும் மகிழ்ச்சியைத் தருகிறது. திருக்கோயில்களில் திருவிழாக்களில் சமயச் சொற்பொழிவுகள் பல தலங்களில் இவ்வாண்டில் இக்கழகத்தின் ஆணையால் நடைபெற்றன. பலதலங்களின் வரலாறுகள் அடக்கவிலைப் பதிப்புக்களாக விற்கப்பட்டன. தலத் தேவாரங்கள் திருக்கோயிற் சுவர்களில் பலருங் கண்டு பயிலும் வகையில் எழுதப்பெற்றன. திருமடங்களும் விழித்தெழுந்து பல வேலைகளைச் செய்யத் தொடங்கியுள்ளன.

## திருமடங்களில் சமயப் பிரசாரம்

இக்கழக உறுப்பினர்களின் தூண்டுதலின்பேரில் சைவத் திருமடங்கள் இவ்வாண்டில் சமயப் பிரசாரம் செய்வதில் முனைந்து நிற்கும் நற்பேறு பெற்றுள்ளன. தருமபுர ஆதீனத்தில் ஆவணி மூலத்தை யொட்டி மெய்கண்டான் சித்தாந்த மகாநாடும் திருமுறை விழாவும் மிகச் செம்மையாக நடைபெற்றன. இவ்வாதீனம் பல நூல்களை வெளியிட்டு வருவதோடு "ஞான சம்பந்தம்" என்ற பெயருடைய ஒரு மாதத் தமிழ்ப் பத்திரிகையையும் தொடங்கியுள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்திலும் பல கோயில்களில் நடைபெறும் விழாக்களில் சமயப் பிரசாரம் செய்யப்படுகிறது. திருவண்ணாமலையில் நடந்த கார்த்திகை விழாவில் இவ்வாதீனத்தின் சார்பில் வீதியில் சமயப் பிரசாரம் நடந்தேறியது. "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது கடலளவு" என்ற முதுமொழியைச் சிறிது மாற்றிச் "செய்தது கைம்மண்ணளவு செய்ய வேண்டுவது கடலளவு" என்றே கூறுதல் அமையும். சென்னை இந்து சமய நிலையப் பாதுகாப்புக் கழகத்தின் மேற்பார்வையில், இனி வரும் ஆண்டுகளில் சைவத் திருமடங்கள் எண்ணக்கூடிய வழிகளிலெல்லாம் சமயப் பிரசாரம்செய்து புகழும் புண்ணியமும் பெறுமென்று நமது சமாஜம் நம்புகின்றது.

## மணிவிழாக் கூட்டங்கள்

இவ்வாண்டில் நமது சமாஜத் தலைவர்களுள் ஒருவராகிய பண்டிதமணி - திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள், உதவித் தலைவராகிய திவான்பகதூர் - திரு. கீ. தெய்வசிகாமணி முதலியாரவர்கள், 'சித்தாந்தம்' பத்திராசிரியராகிய

திருவாளர். திரு. வி. உலகநாதமுதலியாரவர்கள் ஆகியமூன்று பெரியார்களுடைய அறுபதாவது ஆண்டு நிறைவு விழாக்கள் ஆரவாரமற்ற தூயமுறையில் இறை வழிபாடு, சொற் பொழிவுகள், வாழ்த்துரைகள், நூல் வெளியீடு முதலிய சிறந்த அங்கங்களோடு நடைபெற்றன. இப்பெரியார்கள் நீடூழி வாழ்ந்து சமாஜத்துக்குப் பல வழிகளிலும் உதவி புரியுமாறு இறைவனை நமது சமாஜம் வழுத்துகின்றது.

## பெரியார்கள் பிரிவு

இவ்வாண்டில் நமது சமாஜத்துக்குப் பல வழிகளிலும் சிறந்த தொண்டு புரிந்த அன்பர் சிலர் சிவபதமடைந்த செய் தியை நமது சமாஜம் மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கின் றது. நமது சமாஜத்தின் 28-ம் ஆண்டு நிறைவு விழாவைக் கரந்தையில் மிகச் செம்மையாக நடத்திக் கொடுத்தவரும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் மூலமாகவும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மூலமாகவும் தஞ்சை நாட்டாண்மைக் கழகத்தின் மூலமாகவும் ஒப்பற்ற தமிழ்ப் பணியும் சைவத் தொண்டும் புரிந்தவருமாகிய சைவத் திருவாளர்-தமிழவேள்-செந்தமிழ்ப் புரவலர்-ராவ்சாஹேப்-த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களை நாம் இழந்தோம். அப்பெரியார் நினைவுக் குறியாகவே "சீவக சிந்தாமணி"ப் பதிப்பை நமது சமாஜம் வெளியிட்டுள்ளது. பல ஆண்டுகள் நமது சமாஜக் காரிய தரிசியாகத் தொண்டு புரிந்த தொண்டு கிழவர் இருக்கம்-ஆதிமூல முதலியாரவர்களையும் நாம் இழந்தோம். இப்பெரி யார்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

## நன்றி கூறல்

இவ்வாண்டில் மணிவிழாச் சொற்பொழிவுத் தொடர் கள் இரண்டும், பொதுக் கூட்டங்கள் பதினொன்றும், நிர்வாக

சபைக் கூட்டங்கள் நான்கும் நடைபெற்றன. இவற்றுள் மணிவிழாத் தொடர்கள் சிந்தாதிரிப்பேட்டையிலும், பொதுக் கூட்டங்கள் சில திருவண்ணாமலை, சிதம்பரம், வடலூர், திருவதிகை, அச்சிறுபாக்கம், திருப்போரூர், திருவெண்ணெய்நல்லூர் ஆகிய தலங்களிலும், ஏனைய சென்னையிலும் நடைபெற்றன. இக்கூட்டங்களின் நடவடிக்கை விவரங்கள் அவ்வப்போது நமது பத்திரிகையில் வெளிவந்துள்ளன. இச் சமாஜ உறுப்பினர் தொகை இவ்வாண்டின் தொடக்கத்தில் 315 ஆகவும் இறுதியில் 323 ஆகவும் உள்ளது. இத் தொகையை அதிகரிக்கச் செய்வது தொண்டர்கள் முதற் கடமையாகும். நமது சமாஜத்துக்குப் பலவழிகளிலும் தொண்டுபுரிந்துவரும் சைவ சீலர்கட்கும், சமாஜ உத்தியோகஸ்தர்கட்கும், இவ்விழாவை நடத்திவைக்கும் அன்பர்கட்கும் நமது சமாஜம் மனப்பூர்வமான நன்றி செலுத்துகின்றது. மேன்மேலும் சிறந்த சைவத் தொண்டு புரிந்து சமாஜத்துக்கு உதவி செய்யும்படி அவர்களை வேண்டுகின்றது.

இங்ஙனம்
உத்தரவின்படி
**ம. பாலசுப்பிரமணியன்**
காரியதரிசி

## 36-வது ஆண்டுக் கணக்குத் தொகுப்பு

| வரவு | ரூ. | அ. | பை | செலவு | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| சந்தா | 490 | 8 | 0 | வெளியீடுகள் | 104 | 0 | 0 |
| இணைத்தல் சந்தா | 18 | 0 | 0 | சித்தாந்தம் | 371 | 6 | 3 |
| ஆயுள் சந்தா | 70 | 0 | 0 | வெகுமதிகள் | 25 | 0 | 0 |
| வெளியீடுகள் | 537 | 10 | 0 | தபால் வகை | 117 | 15 | 9 |
| தபால் வகை | 17 | 12 | 0 | சில்லரை வகை | 16 | 14 | 0 |
| வட்டி வகை | 24 | 10 | 9 | காகிதம் பேனு வகை | 2 | 8 | 1 |
| பரீக்ஷை கட்டணம் | 15 | 0 | 0 | அறிக்கைகள் | 17 | 2 | 0 |
| நன்கொடை | 1 | 0 | 0 | இந்தியன் பாங்கி டிபாசிட்டு | 534 | 10 | 9 |
| இந்தியன் பாங்கி | 25 | 0 | 0 | | | | |
| | 1199 | 8 | 9 | | 1189 | 8 | 10 |
| ஆரம்ப இருப்பு | 3 | 3 | 8 | முடிவு கையிருப்பு | 13 | 3 | 7 |
| | 1202 | 12 | 5 | | 1202 | 12 | 5 |
| **ரொக்கப் பொருள் வலிவு:** | | | | | | | |
| இந்தியன் பாங்கியில் | 1412 | 8 | 11 | | | | |
| கையிருப்பு | 13 | 3 | 7 | | | | |
| | 1425 | 12 | 6 | | | | |

ம. பாலசுப்பிரமணியன், *காரியதரிசி*

தி. க. சுந்தரம் பிள்ளை, *பொருட்காப்பாளர்*

க. இரத்தின முதலியார், *மாதக்கணித பரிசோதகர்*

எஸ். வையாபுரிப் பிள்ளை, *ஆண்டுக் கணித பரிசோதகர்*

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

## 36-வது ஆண்டு நிறைவு விழா, திரிசிராப்பள்ளி

சைவ இளைஞர் மகாநாட்டுச் சபைத் தலைவர்

திருவாளர் - ரா. சண்முகசுந்தரஞ் செட்டியாரவர்கள்

# நல்வரவேற்புப்பா

ஆசிரிய விருத்தம்

மன்னுபுக ழோதம்வந் துலவுமணி மாடநிறை மன்ற மார்ந்த, என்னவுங்கற் றுணர்ந்தபெரும் புலவரிட வாச மிகு மிறும்பூ தெய்தும், சென்னைநகர் தனின்மருவு முயரிய ராயப்பேட்டை சீர்சான் மிக்க, பன்னரும்வை சியர்மரபு செய்தவப்பே றென்னவளர் பரிவி னேடும். க

அளிசிங்கப் பெருமாளந் தணனுதி பணியவரு ளடைவே நல்கும், ஒளிசிங்கா தனக்கயிலைப் பராபரனற் சமயநெறி யுரிமை தாங்கும், களிசிங்க மிவனெனவே யுலக முறை யதிவிரத கனத னத்துத், தெளிசிங்கச் செம்மலுயர் வள்ளியமைத் தவப்புதல்வன் தெய்வச் சிந்தை. உ

பெற்றுவளர் இனியதமிழ் மணங்கமழு மாங்கிலமும் பெருமி தங்கொள், மற்றுமுயர் விவகாரத் தனிமுதற்செல் வந்தனென மகிழ்மீக் கூர, உற்றதொரு செம்மலென வுலக முரைத் திடவல்ல உண்மை யாளன், பற்றியதன் பற்றகலாப் பரமகா ரியத்துநனி பான்மை மிக்கோன். ௩

நயப்பாக்கம் பெருகவளர் சைவத்துல் லியராரும் நலங்கி ளர்மெய், நயப்பாக்கச் சதாசிவமெய் யடிகளவர் பானன்கு கற்ற செல்வன், வியப்பாக்க நனிபரவ ஆசிரியர் கடமை யினில் வியன்சேர் வாச, பயப்பாக்க நற்சண்முக சுந்தரப் பேர் படைத்ததொரு பண்பி னுளன். ச

சாலமகிழ் சென்னைநகர் பணக்காரக் கந்தனது சார்பிற் ரேய்ந்த, கோலமமர் திருக்கோயிற் கணித்தாகத் தாபித்த குரவன் கொள்கை, சிலமுறு மச்சைவ சமயபக்த ஜனசபை யின் சிறப்புற் ரேங்கக், காலமெலாந் தொண்டுபுரிந் தடிய வரைப் பாராட்டுங் கருணை யாளன். ரு

அன்னசிவா லயத்திற்பு ராணப்ர சங்கஞ்செய் அறிஞன் மேலாய்ச், சொன்னதிரு முறைகளா ராய்ச்சிஙிரம் பியவல வன் சொற்சோர் வின்றி, நன்னயமாய் விமரிசையாய் மிக வழகா யெடுதுரைக்கு நலங்கி ளர்மெய், தன்னிகரில் நன் னெறியைக் கடைப்பிடித்திங் கொழுகிவருந் தன்மை யாளன்.

பெந்தமெலாம் போக்குமந்த திருத்தொண்டர் புராண வுரை பெட்புக் கொண்ட, சுந்தரச்சுப் பிரமணிய செம்ம லொடு நன்குதவத் துணையாய் நின்று, பிந்தமிலா திங்குவெளி வரச்செய்வ தோடிராயப் பேட்டை தன்னில், சந்ததமும் புகழ்பரவச் சொற்பொழிந்து நன்மைதருந் தகைமை யாளன். எ

வேலைநிகர் தமிழ்க்கடலைக் கடந்துகரை யேறியதோர் வியன்சேர் வாச, மேலைப்பு லோலிகதிர் வேற்புலவன் ருபித்து மேம்பா டெய்தும், பாலசுப்பிர மணியபக்த ஜன சபையில் பானுநா டோறும்பண்பாய், மாலைப்போ துயர் பெரிய புராணப்ர சங்கஞ்செய் மகிப னுமால். அ

நாட்டிலுய ரியசென்னை நகரபரி பாலனஞ்செய் நற் ருெழிற்கு, மேட்டிமையார் தனிலுத்தி யோகமுறும் சமத்த

னென விளங்கும் வான்றேய், பாட்டியலை நன்குணர்ந்து பதப்பொருளை விரித்துரைசெய் பரிவிற் கேற்பக், கூட்டுறவா யாரிடத்துங் கலந்துவிசு வாசமுறுங் கொள்கை யாளன். ௯

செல்வழிக்குத் துணையாகுஞ் சிவபூசை விதிப்படியே தினமியற்றும், கல்வியறி வொழுக்கமிகு மனமிரக்க மீகைதயை கருத்தி னீங்காச், செல்வநும துயர்வரவை யெதிர்பார்த்தும் தன்மையினைத் திருந்தச் செய்தும், நல்வினைக்கிங் குறுமிளைஞர் மகாநாட்டுத் தலைமையுற நலமாய் வாரீர். ௧௦

## வாழ்த்து வெண்பா

நற்சைவ சித்தாந்த நாடுசமா சத்தினுயர்
பொற்புறுநீ றக்கமணி போற்றுமனு—அற்புநிறைந்
தோங்குதிருத் தொண்ட ருரியதமி ழாதியவும்
தாங்கிநிதம் வாழ்க தழைத்து.

---

சமாஜப் போஷகரிலொருவராகிய பண்டிதரத்தினம்-குகஸ்ரீ - புழலை - திருநாவுக்கரசு முதலியாரியற்றியது. (மிராசுதாரர், செம்பியம், பிரம்பூர்.)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகாசமாஜம்

36-வது ஆண்டு நிறைவு விழா, திரிசிராப்பள்ளி

சைவ இளைஞர் மகாநாட்டுத்

# தலைமையுரை

(திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார்)

(26—12—1941)

திருச்சிற்றம்பலம்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

சகோதர சகோதரிகளே!

**சை**வ சித்தாந்த மகா சமாஜ முப்பத்தாறுவ தாண்டின் நிறைவு விழாவை யொட்டி இன்று சைவ இளைஞர் மகாநாடு கூட்டப் பெற்றுள்ளது. இம்மகா நாட்டிற்குத் தலைமை தாங்கும் பணியைச் சமாஜத்தினர் எனக்குப்

பணித்தனர். அதனையேற்குந் தகுதி எனக்குச் சிறிதுமில்லை. ஆயினும், பொய்யுடையொருவன் உண்மைத் திருவேடங் கொண்டு உண்மை யடியவர் குழாத்துட் புகுந்து நின்று அவர்கள் காண்டொறும் பாவகம் முற்றித் திருந்திய அடியவனை நிலைபோலச் சமாஜத்தினர் பார்த்த பார்வையால் தலைமை தாங்குந் தகுதி எனக்கு எய்தியதோ வென்றஞ்சுகின்றேன். 'தாயுமா யெனக்கே தலை கண்ணுமாய், பேயனேனையு மாண்ட பெருந்தகை, தேயநாதன் சிராப்பள்ளி மேவிய, நாயனார்' திருமுன் நிற்கின்றேனாதலின் அவரது திருவருள் துணை கொள்ளும் வேட்கை யுடையவனாய் எனது கடமையைச் செய்ய முயல்வேன்.

இளைஞர் மாநாடுகள் இன்றியமையாதன வென்று இக் காலத்திய உலகம் நன்கறிந்ததே. சிறுவர்களுக்கு ஊக்கந் தந்து, பின்னர் சமூகத் தொண்டுகளில் ஈடுபடுத்துவதற்கும், அறிவு விளக்கமடைவதற்கும் சிறந்த சாதனமாக இவை விளங்குகின்றன. சமூகத் தொண்டுகளுள் சமயத் தொண்டே சாலச் சிறப்புடையது. பிறதொண்டுகள் பெரும்பாலும் உயிர் ஓம்புதற்குப் பயன்படுவனவல்ல. சமயத் தொண்டு ஒன்றே உயிருக்குப் பேரின்பநிலை யுதவுவது. எனவே சமயத்தின் பயன் இன்பநிலை யடைதலாகும்.

இன்னருட் படைப்பாய உயிர்களுள் விசேட அறிவுடைய உயிர்களாய்த் திகழ்பவர் மக்களாவார். அவர்கட்கு இன்றியமையாதது சமயம். அவரவர்கள் அறிவுக்கேற்ற வண்ணம் யாதேனும் ஒருசமயம் பற்றி அவர்கள் வாழ்கின்றனர். சமயம் அவர்கட்கு ஓர் அமைதியைத் தருவதாதலின் அதனிடத்து அவர்கட்குப் பற்று மிகுதியாகவுண்டு. அமைதியின்மை உயிர்கட்கியல்பா யுள்ளது. அதனை நீக்கி அமைதியைத் தருவது சமயமாகும். எண்ணங்கள் மிகுதிப்பட உள்ளம் கிளர்ச்சியுற்று, முயற்சியிற் புகுந்து, யாதொரு பயனும்

கிட்டாதாகிக் கவலையுறுங் காலத்துச் சமயம் சாந்தியைக் கூட்டும். சமயம் என்பது மக்கள், என்றும் மன்னி நிற்கும் இறைவனிடத்துவைக்கும்நம்பிக்கை.'கடவுளே முற்றறிவுடையவன்; அவனே உலகம் யாவையும் படைத்தளித் தழிக்க வல்லவன்; அவனே உயிர்களிடத்துத் திருவருள் பாலித்துத் துன்பக் கடலினின்றும் ஏற்றுங் கருணையன்; அவன் இன்ப வடிவினன்; அவனன்றி யோரணுவும் அசையாது; அவனை யடைதலே பேரின்பநிலை" என்றித்திறங்கோடலே நம்பிக்கையாம். இன்னோரன்ன கருத்துக்கள் சமயக் கொள்கைகளாகும். அவை மக்களை இழிந்த நோக்கங்களினின்றும் தாழ்ந்த உணர்ச்சிகளினின்றும் நீக்கித் தூய்மையுடையவர்களாக்கி இறைவன் பால் அன்பு செலுத்தி யொழுகும்படிச் செய்வன. அங்ஙனம் அவர்கள் ஒழுகத் தலைப்படுவது எந்நாளும் உறுந்துயரம் நீங்கி இன்பம் பெறுவதின் பொருட்டேயாகும். இவ்வின்பமோ தூயவறிவுடையவராய்த் தூயவெண்ணங் கொண்டு துன்பந் தரத்தக்கன விலக்கி நன்முயற்சியில் நுழைந்து விதித்தன புரிந்து நிற்பதால் அநுபவிப்பது. எனவே சமயப் பற்றுடையவர்க்கே அழியா இன்பம் கைகூடும். அஃதில்லாதார்க்கு அவ்வின்பமில்லை யெனலாம். சமயப்பற்றின்றி வாழ்வான் நிலை யந்திரமில்லாத ஒரு கடியாரம் போன்றதென்று ஒரு ஆங்கில முதுமொழி கூறுவது கருதத் தக்கது. சமயம் இன்பந் தருவது என்பது, முடிந்த பொருளாம். 'உலகி னவல மறுப்பது' சமயத்தின் பயன் என்றருளினர் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு ஞானம் பெற்ற சம்பந்த நாயனார்.

இன்பம் விழைவதே உயிர்களதியல்பு. இன்பம் நுகருந் திறம் பலவாகும். பலதிறப்படுகின்ற காரணத்தால் பல சமயங்கள் விளங்குகின்றன. அவைகளுள் பேதங்களுளவாயின. பேதங்களனைத்தையும் கண்டு கழிப்பித்துச் சிறப்

புடைய இன்பநிலை கண்டவர்களே சைவர். அத்தகையவர் கான்முளையாக நாம் யாவரும் திகழ்கின்றோம். இஃது நமது பண்டை நற்றவம் தந்த பாக்கியம் என்றே மொழிதல்வேண்டும். அந்தமிலழியாவின்ப நிலையை அவர்கள் ஆராய்ச்சியாற் கண்டனர். உயிர்கட்குச் சிறப்பாக வேண்டத் தகுவன ஆராய்ச்சியும் அநுபவமுமாம். ஆராய்ச்சியானும் அநுபவத்தானும்நிறுவிய உண்மைகள் சைவசித்தாந்த நுண்பொருள்களாகும். ஆராய்ச்சியால் இன்பநிலை கண்டமுறை சிறிது அறிவோமாக.

இன்பநிலையைச் சமயவாதிகள் முத்தியென்று மொழிந்தனர். உலகின்கண் நுகரப்படும் பலவகை இன்பங்களுள் தலையாயது மகளிர்போகமென்ப. அதனையே மந்தவறிவினர் முத்தி யென்றனர். மந்தவறிவினர் சிறிது சிறிது மேம்பட்டு அறிவு விளக்கமடைந்தவர்களாய்த் தாம் தாம் ஒவ்வொரு இன்ப நிலையைக் கண்டனர். அம்முத்தி பேதங்களை விளக்கிச், சைவவுலகம் செய்தவப் பயனுய்வந்த ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்,

*அரிவையரின் புறுமுத்தி, கந்த மைந்தும்*
*அறுமுத்தி, திரிகுணமும் அடங்கு முத்தி*
*விரிவுவினை கெடுமுத்தி, மலம்போம் முத்தி*
*விக்கிரக நித்தமுத்தி, விவேக முத்தி*
*பரவுமுயிர் கெடுமுத்தி, சித்தி முத்தி,*
*பாடாண முத்தி, இவைபழிசேர் முத்தி*
*திரிமலமும் அகலவுயிர் அருள்சேர் முத்தி*
*திகழ்முத்தி யிதுமுத்தித் திறத்த தாமே.* (50)

எனச் சிவப்பிரகாசத்துள் உரைத்ததறிக. பிறசமயங்களின் முத்தியாகிய இன்பநிலைகளை யாராய்ந்து அவை யாவும் பழிசேர் முத்தியென மறுத்து, உயிர், ஆணவம், கன்மம், மாயை

எனப்படும் மும்மலங்களும் நீக்கிச் சிவபெருமானது திருவருள் ஞானத்தைப் பெற்றுச் சிவானுபவமாய் நிற்றலே சைவ சித்தாந்த முத்தி என்னும் முறைமை யுணர்த்தப்பட்டது. ஆராய்ச்சியாற் பெற்றது அநுபவத்திற்கு நிலைக்களமாயுள்ள இறைவனே யாகும்.

அநுபவமாவது அழுந்தியறிதல் என்பது மாதவச் சிவஞானயோகிகள் விளக்கியதாகும். சிவபெருமானிடத்து எங்ஙனம் அழுந்துவதென்னில் வழிபாட்டால் அழுந்துதல் வேண்டும். வழிபாடு, இறைவன் திருக்கோயில்களிலும், சிவபெருமான் திருவேடத்தினிடத்தும், உண்மைச் சிவனடியாரிடத்தும் செய்யத்தக்கது. திருக்கோயில்கள்யாவும் யாண்டும் வியாபித்திருக்கும் முழுமுதற்கடவுளை விளக்கமாக உயிர்களுக்கு அறிவிக்குந் திறத்தனவாயுள்ள இடங்களாகும். அங்கு அமைக்கப்படும் குறிகளாகிய இறைவனது திருவுருவங்கள் பேரருள் சுரக்கும் பான்மையன. இவை பேரின்ப நிலை நாடுவோர்க்குச் சிறந்த துணையாவன. திருஞானசம்பந்தரும், "குறியாற் குறிகொண்டவர் போய்க்குறுகும், நெறியான் நெல்லிக்காவு ணிலாயவனே" எனவுரைத்தமை காண்க. குறிகளாகிய திருவுருவங்கள் இறைவன் சிறப்பு நிலையை அறிவிக்கும் சீருடையன. அவையன்றி இறைவன் மாட்டு எண்ணங்கள் எழமாட்டா. திருக்கோயில்களில் செய்யப்பெறும் நித்திய பூசைகளும் திருவிழாக்களும் இறைவனது அருட் டன்மைகளை விளக்குவான் பொருட்டே செய்யப்பெறுகின்றன. இவற்றை யறிந்து வழிபடுதலே மாந்தர் கடனாம். நோயுள்ள ஒருவன் மருத்துவ சாலைக்குச் சென்று அங்கு மருத்துவன்பால் நோயினாலுற்ற குறைகளைச் சொல்லி நோய் தீர்த்தற்கேற்ற மருந்தினையுண்டு நோயற்றவனாதல் போலப் பிறவி நோயுற்ற வுயிர்கள் வைத்தியநாதனாகிய இறைவன் திருமுன் நின்று குறைகளைச் செப்பித் துன்பம் நீக்கிக்

கொள்ளுதல் வேண்டும். பிறவி நோய்நீக்கும் சாலைகளே திருக்கோயில்கள். சுந்தரரும்,

'சாலக்கோயிலுள நின்கோயிலவை யென்றலைமேல் கொண்டாடி
மாலைதீர்ந்தேன் வினையுந்துரந்தேன் வானோரறியா நெறியானே'

எனவருளியதுங் காண்க.

பிறவி நோய் நீக்கும் மருந்து திருவேடம் என்ப. திருவேடமாவது இறைவனது சின்னங்களாகிய திருவெண்ணீறும் கண்டிகையுமாம். இவை பார்க்குந்தோறும் உயிர்களை வசீகரப்படுத்துமியல்பின. தூய எண்ணங்கள் எழுவது கண்கூடு; உலக எண்ணங்கள் ஆசை வயத்தவாய்ப் பிறவி நோய்க்கு மூலகாரணமாகும். அவைகளை மாற்றி இறைவனையறியும் முயற்சியில் ஈடுபடுத்துந்திறம் திருவேடங்களுக்குண்மையின் அவை மருந்தாயின. அப்பர்மூர்த்திகளைக் கண்டமாத்திரத்தே திருவேடம் தொழுத ஆளுடைய பிள்ளையார்,

"மருந்து வேண்டில் லிவை மந்திரங்களிவை
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்களிவை
திருந்து தேவன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழு மடிகள் வேடங்களே"

எனத் திருவேடங்களைப் போற்றியதூஉங் காண்க. மேலும் அவ்வேடங்கள் "வீதிபோக்காவன; வினையை வீட்டுவ்வன; ஓதியோர்க்கப்படாப் பொருளை யோர்விப்பன; மானமாக்குவ்வன; மாசு நீக்குவ்வன; வானையுள்கச் செலும் வழிகள் காட்டுவ்வன; செவிகளார்விப்பன; சிந்தையுட் சேர்வன; கள் பாடுவ்வன; கண்குளிர்விப்பன; விண்ணுலாவுங் நெறி வீடுகாட்டுங் நெறி; மண்ணுலாவுங் நெறி; மயக்கந் தீர்க்கு நெறி; துளக்கமில்லாதன; தூய தோற்றத்தன; விளக்

மாக்குவ்வன ; அருமருந்தாவன" எனப் பாராட்டப்பட்டுள்ளன.

இவ்வேடங்கள் உண்மை யடியவர் குழாத்துள் புகுத்தும். அவர்கள் யாவரும் தம்மை விடுத்தாயும் பழைய தொண்டர்கள். பூசுகின்ற நீறுபோல உள்ளும் புனிதர்கள். இறைவனையே நோக்கி நிற்கும் நோன்பினர். பதார்த்தம் பாராப் பண்பினர். அவர்களுறவு வினையைப் போக்குந் திறம் வாய்ந்தது. ஞானஆரமுதுண்ட நாயனாரும்,

விண்டொழிந்தன நம்முடை வல்வினை விரிகடல் வருநஞ்சம்
உண்டிறைஞ்சு வானவர் தமைத்தாங்கிய விறைவனை யுலகத்தில்
வண்டுவாழ் குழன்மங்கை யொர்பங்கனை வலஞ்சுழி யிடமாகக் [லே.
கொண்டநாதன்மெய்த்தொழில் புரிதொண்டரோடினிதிருந்தமையா

எனவரும் திருப்பாட்டினுள் திருத்தொண்டர் இணக்கம் நன்மை பயக்குமென அறிவுறுத்தியதறிக. திருக்கோயில்கள், திருவேடங்கள், நல்லாரிணக்கம் இவை மூன்றும் உயிர்கள் ஊனத்தை நீக்கி இன்பம் கூட்டுவனவென ஒருவாறு கண்டோம். நம்மனோருள் சிலர் இவற்றை யெல்லாம் பழைய பல்லவி யென்பர். எங்ஙனம் கூறினும், ஒரு நோய்க்குத் தேர்ந்த மருந்து என்றும் மாறாததுபோல இவையே பிறவி நோய் போக்குவதற்குச் சிறந்த மருந்து என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

சைவ சமய குரவர்களாகிய நால்வரும் இவைகளையே உணர்த்தினர். உண்மைத் திருவேடங்கள் தாங்கி அடியவர் கூட்டம்பற்றி நின்று திருக்கோயில்கள் சென்று சென்று தொழுவதே கருமமாகக் கொண்டனர். பிறரையும் அங்ஙனம் ஏவினர். இறைவனிடத்துத் தங்களுள்ளம் அழுந்தும் வண்ணம் இன்னிசைத் தமிழ்ப் பதிகங்கள் சாற்றினர். அப்பதிகங்களில் இறைவனது பொருள்சேர் புகழ் மிகுந்து

மிளிர்வது கண்கூடு. இசை, மக்களை யீர்த்து இறைவனது அருட்குணங்களை யுணரச்செய்தது. அவ்வாறு அறிதற்கு மக்கள் அறிந்த மொழி கருதியே அரிய செந்தமிழிலே திருப்பதிகங்கள் யாத்தனர். அவற்றைப் பண்ணொன்று இசையில் அமைத்தனர். ஆளுடைய பிள்ளையார் நாளுமின் னிசையாற் றமிழ் பரப்பினுர் என்றறிவிக்கப் படுகின்றது. அவர்கட்குத் தமிழிசையே வளப்பம் தந்தது. யாழ், குழல் முதலிய இசைக் கருவிகளும் தமிழிசைக்கே பயன் பட்டன என்றறிகின்ரேம். ஆனயர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், பாணபத்திரர், திருமுறைகளுக்குப் பண் வகுத்த பாணினி யார் ஆகிய இவர்களைத் தமிழிசை வளர்த்த பெரும் இசை வாணர்களை நம் தமிழ்நாடு பெற்றிருந்ததல்லவா. கால பேதத் தாலும், பிற காரணங்களாலும் அவ்விசை குன்றிற்றெனின் தமிழ் நாட்டில் தமிழிசையின்று என்பது பேதமையால் நேர்ந்த வெற்றுரை யென்றே இகழ்தல்வேண்டும். பெருங் கொடையாளர் கனம் - ராஜா - சர். அண்ணுமலை செட்டியா ரவர்கள் தமிழிசை யாக்கங்கருதி உவந்தளித்த பெருநிதியைக் கண்டுங் கேட்டும் மனம் பொறுதவர்களாலாகும் இற்றைநாட் கிளர்ச்சி நம் தமிழ் நாட்டில் எற்புத் துளைதொறும் தமிழ் ஊறிய தமிழ் மக்களை மயக்க வொண்ணுத தென்று யானுரைக்கவும் வேண்டுமோ. வேண்டுவதில்லை.

சைவ இளைஞர்களே! இடைப் பிறவரலாகச் சற்று இசை இயக்கத்தில் நுழைந்தேன். இன்னிசைத் திருப்பாட் டுக்கள் இறைவனைக் காட்டும் கைகண்ட மந்திரங்கள். திருப் பாடல்களைக் காதலாற் கசிந்துவோத இறைவனது திருவுரு வம் அகத்தே விளங்கி மிளிர்வது ஒருதலை. அகப்புறக் கர ணங்கள் ஒன்றுபட்டுப் பெரு மகிழ்ச்சி யடைந்து பேரின்ப நிலையில் திளைப்பது உண்மை நாயன்மார்கள் கண்ட அநுப வம். இதுவே சைவ சித்தாந்த முத்தி நிலையாகும்.

அத்தகைய பேரின்ப நிலையில் மக்களனைவரையும் செலுத்திச் சைவ வொழுக்கங்களில் நிற்குமாறுசெய்வது சைவ இளைஞர்கள் முக்கிய கடமையாகும். உலகம் பலதிறப்பட்டவர்களை யுடையது. அவர்கள் பேசும் மொழிகளால் மாறுபடுவர்; ஒழுக்கங்களால் மாறுபடுவர்; அறிவால் மாறுபடுவர். எத்தகையராயினும் அவர்கட்குச் சைவ சித்தாந்தக் கருத்துக்களையும் ஒழுக்கங்களையும் உணர்த்துதல் வேண்டும். பிறமொழி உடையோர்க்கு அவர்தம் மொழி பயின்று, நூலானும் உரையானும் அறிவித்தல் முறைமையாகும். பிறவொழுக்கமுடையோர்க்கு அவரது குறைகளை நயமுடன் எடுத்துக் காட்டித் திருத்திச் சைவ வொழுக்கங்களில் செலுத்துதல் கடன். அறிவால் மாறுபடுவோர்க்கு அவரவர் கண்ட நுணுக்கங்களையே செம்மைப் படுத்தியமைத்து உண்மைச் சைவ நிலை காண அறிவு கொளுத்துதல் வேண்டும். இவை யாவும் ஆன்றோர் செய்யத் தக்கபணியாம். பிறர்மொழி கற்றல் இளைஞர்கள் கடமையெனக் கருதியே இதனை இங்குரைத்தேன். வடநாட்டிலிருந்து சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் நூல்கள் ஆங்கிலத்தில் யாவை எனப் பல கடிதங்கள் பேரறிஞர்கள் பலருக்கும் வருகின்றன. அக்குறையை நீக்கவே இளைஞர் யாவரையும் பிற மொழிகளைக் கற்குமாறு வேண்டுகிறேன்.

சைவ இளைஞர்களே! சமயவுலகத்தில் நால்வகையான மக்களைக் காண்போம். முதலாவதாக ஒரு கூட்டம் கடவுள் நினைப்பின்றி உண்பதும், உழைப்பதும், உறங்குவதுமாயுள்ள மக்களையுடையது. இரண்டாவதாக முன்னையோர் காட்டிய முறைபோலத் திருக்கோயில் முதலியன வழிபாடு செய்வதும், புராணக்கதைகளைக் கேட்டு மகிழ்வதுமாயுள்ள கூட்டத்தினருண்டு. மூன்றாவதாக இரண்டாவது கூறிய கூட்டத்தினருக்கு மாறுபட்டவராய் இறைவனிடத்து அன்புடையோம்

என்று சொல்லி வாழ்பவர். நான்காவதாக ஆடம்பரமின்றி வழிபாடுகளின் உண்மையறிந்து பேரறிவுடைய மாண்பினராய் நின்று வாழ்பவர். இறுதியாகக் கூறப்பட்ட தொகுதியினரோடு இளைஞர்களுக்கு யாதொரு செயலுமில்லை. அன்னவர்களைத் தமக்குப் பயன் படுத்திக்கொள்ளுதல் நலமாம். முதல் மூன்று கூட்டத்தினருக்கே சமயபோதனை வேண்டும்.

இவ்வருமைத் தொண்டினைப் புரிதற்குச் சைவ இளைஞர்கள் தனித் தனியாகச் செய்வது இயலாததே. நகரூர்களில் சைவக் கழகங்கள் நிறுவி மேற்கூறிய மக்கட்கு ஏற்ற முறையில் பிரசாரங்கள் நிகழ்த்தல் வேண்டும். வாரத்திற்கொரு முறையேனும் மக்களைக் கூட்டிச் சிறப்புடைய அறவுரைகளும் சமயவுரைகளும் போதிக்கவேண்டும். தமிழ்நாடு மாதவம் செய்தது. நாடெங்கும் தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டு புரிகின்ற சங்கங்களும் திருமடங்களுமுள்ளன. கரந்தைத் தமிழ்ச்சங்கமும்,மயிலம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் திருமடமும் தமிழ்க் கல்லூரி நிறுவி சிறந்த பணியாற்றி வருகின்றன. பெரும்பாலும் சங்கங்கள் ஆண்டு தோறும் ஆண்டு விழாச் சிறப்பு செய்வதே முறைமையுடையன. இவற்றால் தமிழுலகமும் சைவ வுலகமும் என்ன பயன் பெறும்? அவர்கள் செயத்தகுபணி சில சிறப்புடைக் கழகங்கள் எத்துணை பணிகள் எவ்வகையாகச் செய்கின்றன என்றறிந்து செய்வதேயாகும். சென்னையில் தமிழுக்கே சிறப்பாகச் சிறந்த தொண்டு புரிவது சென்னை வேதாந்த சங்கமாகும். அதனை நடத்துவோர் தமிழார்வத்தினுருவனைய திருவாளர் - வித்வான். தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், M. A., B. L., M. O. L. ஆவார். அன்னார் நீடூழி வாழ்கவென இறைவனை வழுத்துவன். அவருடன் துணை நின்று வகுப்புகளில் பாடங் கற்பிப்போர் திருப்பனந்தாள்

திருமடத்துப் பரிசு பெற்றோரும் பெறுவோருமாயுள்ள புலமை நிரம்பிய பேரறிஞர்கள். அத்தகைய ஆர்வம் யாண்டும் விளங்குமெனின் தமிழுலகம் எத்துணைச் சீர்பெற நிற்கும் என்பது நினைக்கவும் வேண்டுமோ! காஞ்சிபுரத்தில் இரண்டு சங்கங்கள் மேம்பட்ட சமயத் தொண்டுகளைப் புரிகின்றன. ஸ்ரீமத் ஞானியார் சங்கம் ஒன்றாகும். நாடோறும் புராண படனம் செய்வதே அச்சங்கம் கடைப்பிடித்துள்ளது. மெய் கண்டார் கழகம் மற்றொன்று. சாத்திரபாடம் நடத்துவதோடு வாரந்தோறும் காஞ்சியிலுள்ள பல திருக்கோயில்களும் சென்று காஞ்சிப்புராணபடனம்செய்கின்றது. சென்னையில்பல சமயச் சங்கங்களுள்ளன. வாரந்தோறும் சமய போதனையைச் சிறப்பாகச் செய்து வருவது ஸ்ரீ பாலசுப்ரமணிய பக்தஜன சபையாகும். எத்தகைய புலமையுடையோரும் அச்சபையின் சார்பாக ஒருரையேனும் பேசாதிருக்கின்றார்களென்று எண்ணுவதற்கில்லை. சென்னை மல்லிகேசுரர் திருத்தொண்டர் சபையினரும் வாரந்தோறும் புராணபடனம் நிகழ்த்தி வருகின்றனர். அறநூல்களுணர்த்துவதுவே கடனாகக் கொண்டு மதுரையில் திருவள்ளுவர் கழகமும், வாலாஜாபேட்டையில் திருக்குறள் கழகமும் வாரந்தோறும் திருக்குறள் பாடம் கற்பித்து வருகின்றன. திரிச்சிராப்பள்ளி தூத்துக்குடி பூவாளூர் சைவசித்தாந்த சபையினரும் இயன்ற பணியாற்றி வருகின்றனர். கடந்தைத் தமிழ்ச் சங்கத்தார் கிராமந்தோறும் சென்று சமயத்தொண்டு செய்து வருகின்றனரென்று அவர்களது ஓர் அறிக்கை அறிவிக்கின்றது. அஃது யாவரும் புகழக் கூடியதாகும். நான் அறிந்தவளவிலே இச்சங்கங்கள் செய்பணியை யறிவித்தேன். இன்னும் பல கழகங்கள் இன்ன பணிகளைச் செய்கின்றனவெனில் யான் மகிழ்வேன். நீங்களும் மகிழ்வீர்கள்.

(தொடரும்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

## 36-வது ஆண்டு நிறைவு விழா, திரிசிராப்பள்ளி

## சைவ இளைஞர் மகா நாட்டுத்

# திறப்புரை

[க. அரங்கசாமி முதலியார், உதவி மேற்பார்வையாளர்
நகர நாட்டாண்மைக் கழகங்கள், திரிசிராப்பள்ளி]

சைவ இளைஞர்களே!

உங்கள் மகா நாட்டைத் திறக்க நான் முன்வந்துள்ளது சைவசித்தாந்த மகாசமாஜத்தின் அமைச்சர் தாம் இட்ட பணியாலல்ல. இது நானே எடுத்துக்கொண்ட பொறுப்பு. இதற்கு அனுமதி கொடுத்ததற்கு அமைச்சருக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். நான் சொல்வதில் பிழைகளிருப்பின் அவை என் பொறுப்பேயாகும்.

நான் சொல்ல எண்ணியது இரண்டு வரம்புகளையுடையது. முதலாவது, அது இளைஞரை நோக்கிச் சொல்வது; அறிவிலும் அநுபவத்திலும் முதிர்ந்த பெரியோருக்கல்ல; இரண்டாவது, இளைஞரிலும் சைவ சமயத்தைச் சார்ந்த இளைஞருக்கே.

இளைஞருக்கு முதியவர் புகட்டக்கூடிய அறிவு எத்தகையது? அது கல்வியறிவல்ல. தூய தமிழ் மொழியிலோ, சைவ நூலறிவிலோ என்னைக் காட்டிலும் உங்களிற் சிலர் மிகுந்திருக்கலாம். ஆனால் என்னைப்போன்ற வயதில் முதிர்ந்தவர்களின் அனுபவம் இளைஞராகிய உங்களுக்கு இராது. ஆகவே நானும், வயதில் என்னையொத்த சில சைவர்

களும், சைவ சமயத்தை எப்படி அனுட்டித்து வருகிறோ மென்பதையும், அவ்வனுட்டானத்தில் என்ன குறைகள் என்ன கஷ்டங்களிருக்கின்றன என்பதையும், அவற்றை இளைஞர்களாகிய நீங்கள் எப்படி விலக்கவோ, தீர்க்கவோ முயலவேண்டுமென்பதையும், நான் தெளிவாகச் சொல்லி விடுவேனானால் நான் எடுத்துக்கொண்ட பணி முடிவு பெற்ற தாகும்.

கல்வியறிவும், சமயநூற் பயிற்சியும் மாத்திரமே நற் கதியைத் தாரா. இதைக் கண்கூடாகத் தற்சமயம் மேனாட் டில் நடக்கும் பெரும்போரில் பார்க்கிறோம்; மேனாட்டார் கல்வியறிவில் நம்மைக் காட்டிலும் மேலானவர்களே. அவர் கள் சமய நூலறிவிலும் நமக்குப் பின்வாங்கினவர்களல்லர். சமயப் பிரசாரம் செய்யப் பாதிரிமார்களைக் கீழ்நாடுகளுக்கு அனுப்பினார்கள்; பணத்தையும் அனுப்பினார்கள். அவர்கள் இங்கு வந்து தங்கள் சமயத்தைத் தழுவினால்தான் நமக்கு நற் கதியுண்டென்றார்கள். அச்சமயம், தற்போது என்ன பாடுபடு கிறது மேனாட்டில்? அச்சமயத்தைத்தழுவி வந்தவர்கள் லக்ஷக் கணக்காக ஒருவரையொருவர் கொன்று மடித்து வருகிறார் கள். காரணம் என்ன? இளைஞர்களே! நாள்தோறும் போர்ச் செய்தியைத் தினசரித்தாளில் பார்த்து வேடிக்கையாகப் பேசுவதோடு நின்றுவிடக்கூடாது. நகரங்களும், நாடுகளும் அழிவதையும் கணக்கிட முடியாத மக்கள் மடிவதையும் பார்த்து நாம் வருந்தவேண்டும். ஈசன் தந்த ஆராய்ச்சி யறி வைக்கொண்டு காரணத்தைக் காண முயலவேண்டும். கார ணம் என்ன? சமயக் கொள்கைகளில் குற்றமில்லை. கடவுள் ஒருவரேயென்றும், பலவிதப்பட்ட சமயங்கள் அவரை யணுகப் பல திசைகளிலிருந்து ஓரிடத்துக்கே செல்லும்வழி கள் போல்வனவென்றும், நம் சைவ சமய நூல்களே அறை கின்றன. சமயநூல்களில் சொல்லியிருப்பதைச் செய்கைக்குக்

கொண்டு வராததே காரணம். கடவுள் எல்லா உயிர்களிடத்திலும் உள்ளார் என்பதும், தன்னுயிரைப்போல் மன்னுயிரைப் பார்க்கவேண்டுமென்பதும், எல்லாச் சமயங்களிலும் உள்ள கொள்கை. நம் சைவ சமயமோ அன்பையே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதை மிகத் தெளிவாக "அன்பே சிவம்" என்பது முதலியவற்றால் அறிகிறோம். ஆனால் அனுட்டானத்தில் சைவ சமயம் எந்நிலையிலிருக்கிறது? சமய நூலறிவிற்கும் வாழ்க்கைக்கும் ஒற்றுமையில்லை. என் அனுபவத்திற்பட்ட குற்றங் குறைகளில் முக்கியமான சிலவற்றை வரிசையாகச் சொல்லுகிறேன்.

## 1. பிறப்பால் உயர்வு தாழ்வு

பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை யென்பது, நம் சமய குரவர்கள் பாக்களிலும் அதற்கு இலக்கியமான சைவப் பெரியார் வாழ்க்கைச் சரித்திரமாகிய 12-ம் திருமுறையிலும் இடித்து உரைக்கப்பட்டிருக்கிறது. அதைப் படிக்கிறோம். ஆனால் அதன்படி நடப்பதில்லை. தமிழ் நாட்டிலுள்ள சைவ ஆலயங்களில், ஒரு சாதியார் நம்மை "இந்த வாசற்படிக்குள் வராதே" என்று விலக்க, நாம் மற்றொரு சாதியாரைக் "கொடிக் கம்பத்துக்கு அப்புறம் நில்" என்று சொல்ல அச்சாதியார் வேறொரு சாதியாரைக் "கோவில் மதிலுக்கு வெளியே நில்" என்கிறார்கள். ஆயினும் மேற்சொன்ன நான்கு வரம்புகளில் நிற்கும் நான்கு வகுப்பினரும் ஒரு சமயத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லிக் கொள்கிறோம்.

## 2. தீண்டாமை

சைவ சமயம் தீண்டாமைக்கு இடந்தரவில்லை. ஆயினும் கேட்பவர்களுக்கு ஒரு யுக்தி சொல்லுகிறோம். அதாவது தாழ்ந்த ஜாதியாரிடம் தூய்மை குறைவு என்கிறோம். இங்கு, தூய்மை என்பது உடல் தூய்மை; மனத்தூய்மையை

நாம் கண்ணால் காணமுடியாது. இது உண்மையான காரண மானால் தற்சமயம் திருவாங்கூர் நாட்டில் விதித்திருக்கிறபடி நீராடி, ஈர ஆடையோ பட்டு ஆடையோ உடுத்திக்கொண்டு வருபவர்களை யெல்லாம் கோயிலுக்குள் விடலாம்.

ஆனால் இதற்குப் பெரும்பாலும் நம் நாட்டுக் கோயில் நிர் வாகத்தார் உடன்பட மாட்டார். நான் சொல்லியபடி இது ஒரு சாக்கு, உண்மையான காரணமல்ல. தீண்டாமையினால் கோயில் வழிபாட்டுக்கு உண்டாகும் தீமை அவ்வளவு பெரி தல்ல. கோயிலுக்கு ஒருவன் செல்லாமலே நற்கதியடைய லாம். தீண்டாமையால் தாழ்ந்த சாதியாரின் தினசரி வாழ்க் கைக்கு உண்டாகும் தீங்கு முழுமையும் உங்களில் அநேகர் அறியீர். என் தொழில் முறையில் சென்ற மூன்று ஆண்டு களில் நான் கண்டதில் இரண்டொன்றைச் சொல்லுகிறேன். உள் நாட்டிலுள்ள பல ஊர்களுக்குச் செல்லும்போது அங்கு வசிப்பவர்களுக்குக் குடி தண்ணீர் வசதி யிருக்கிறதா வென் பதைக் கவனிக்க வேண்டியது என் பொறுப்புக்களில் ஒன்று. நம் தமிழ் நாட்டைச் சேர்ந்த 10 ஜில்லாக்களில் அநேக பாகங்கள் நீர்வளங் குன்றிய மேட்டுப் பாங்குகள். குடி தண்ணீர்க்கிணறு வெட்ட வேண்டுமானால் பொருள் செலவு அதிகம். சர்க்காரால் ஒவ்வொரு சாதியாருக்கும் தனித்தனி கிணறு வெட்ட இயலாது. பொதுவிடத்தில் ஒரு கிணறு வெட்டி எல்லோரும் அதில் தண்ணீர் எடுத்துக் கொள்ளட்டு மென்பார்கள். ஆனால் நடப்பதென்ன? தீண்டும் சாதியார் தீண்டாத சாதியாரை அக்கிணற்றில் தண்ணீர் மொள்ள விடுவதில்லை. தீண்டாத சாதியார், ஊரில் ஏதாகிலும் குட்டைக ளிருந்தால் அதிலுள்ள சேற்றுத் தண்ணீரைத்தான் எடுத்து உபயோகித்துக் கொள்ளவேண்டும். காலரா முதலிய கொள்ளை நோய் வந்தால் சேரியிலுள்ளவர்கள்தான் அதிக மாய் மாள்வதற்குக் காரணம் ஈதே. ஓர் ஊரில் பொதுக்

கிணற்றண்டை சில பெண்டிர் நீர் எடுக்கவும் சில பெண்டிர் மண் குடங்களை வைத்துக்கொண்டு புறத்தே நிற்கவும் கண்டேன். அங்குள்ள ஆடவர்களை "நீங்கள் என்ன ஜாதியார்" என்றேன். "குடித்தனக்காரர்" என்றார்கள். என்ன சமயத்தார்களென்று கேட்டதற்கு "நீறு பூசி" என்றார்கள். ஆடவர்களுடன் நான் பேசியதை விட்டுவிட்டுத் தண்ணீர் மொள்ளவந்த பெண்டிர் செய்ததை மட்டும் சொல்லுகிறேன். வேளாள குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி தன் குடத்தால் நீர் முகந்து புறத்திலிருந்த இரண்டு தாழ்ந்த பெண்களின் மட்குடங்களை நிரப்பி விட்டுப் பிறகு தான் தண்ணீர் எடுத்துச் சென்றாள். இந்நிகழ்ச்சியை என்னென்று சொல்வது? கொடுமையா, கருணையா? இரண்டு மிருந்தன. கொடுமை ஆடவர் பக்கம், கருணை பெண்டிர் பக்கம். தீண்டாமை யென்னும் எண்ணத்தையும் வழக்கத்தையும் சில நூற்றாண்டுகளாகப் பெண்களுக்குத் தந்தது ஆண்மக்களே. அன்பையும் கருணையையும் பெண் உருவமாக நம் சைவ சமயம் ஓவியப்படுத்தியிருக்கிறது. ஒரு குடம் தண்ணீர் எடுக்கக் கிணற்றண்டை வந்த பெண் இரு குடம் தண்ணீரைப் பிறருக்குத் தந்து மூன்றாவது குடம் தண்ணீர் தான் எடுத்துப்போவது அன்புப் பெருக்கல்லவா? இவ்வளவு அன்புள்ள பெண்டிர்களிடம் "தீண்டாமை ஒழிய வேண்டும்" என்று ஆடவர்கள் இடைவிடாது சொல்லி வந்தால் அவர்கள் அதை ஒழிக்கவாமாட்டார்கள்? இவ்வித மான நிகழ்ச்சிகள் பல நான் கண்டன.

## 3. தாய் மொழியில் முழுப்பற்றின்மை

சைவசமயத்தை எல்லோரும் அறிந்து அனுபவிக்க வேண்டிய அளவு நூல்கள், தமிழ் மொழியிலிருந்தாலும் அச்சமயத்தை விளக்குவதாகச் சொல்லிப் பிற மொழிகளை

நுழையவிட்டோம். அம்மொழிகள் நுழைந்தபோது அம்மொழிகளிலுள்ள சைவ சமயத்துக்கு மாறான கொள்கைகளும் நுழைந்தன. மேற்சொன்ன பிறப்பால் உயர்வு தாழ்வு, தீண்டாமை முதலிய கொடுமைகள் இவ்விதமாய் வந்தவையே. நம் நன்னடைக்கு வேண்டிய நீதி நூல்கள் தமிழில் நிறைய இருக்கின்றன. சிறு வயதில் கற்கக்கூடிய ஆத்திசூடி, நல்வழி, நன்னெறி முதல் திருக்குறள், நாலடியார் ஆதியாய பதினெண் கீழ்க்கணக்கு ஈறாக இருக்கின்றன. சமய உணர்ச்சியை வளர்த்து ஈசனை வழிபடத் திருமுறைகளும் அதற்குப் பின்னிட்ட தோத்திரப்பாக்களும் இருக்கின்றன. உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் மக்கள் தம் தாய் மொழியில் தாம் வணங்கும் தெய்வத்தை வணங்கி மனமுருகப் பாடி வீடுபெற முயல, தமிழ்நாட்டிலோ சில சைவர்கள் பிற மொழியில் வணங்க முயலுகிறார்கள். பிற மொழியில் பயிற்சியில்லாத என்னைப் போன்றவர்கள் கோயிலுக்குச் சென்று, அம்மொழியில் பிறரைத் தொழச்செய்து, நுகர்ச்சியற்ற கம்பத்தைப்போல் நிற்கிறார்கள். "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் ... சிவனடிக் கீழ்" என்று நமக்கு உரைத்துள்ளார் மாணிக்கவாசகர். ஆனால் தற்காலத்தில் என்னைப்போன்றவர்கள் அனுட்டிக்கும் சைவ சமயம் மாணிக்கவாசகரால் சொல்லப்பட்டதற்கு மாறானது.

(தொடரும்)

# சமாஜ முப்பத்தாறும் ஆண்டு விழா

[காரியதரிசி]

இவ்விழா மிகச் சிறப்பாகத் திரிசிராப்பள்ளியில் 1941ஆம் டிசம்பர்மீ 25வ வியாழக்கிழமை முதல் மூன்று நாட்களில் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ் ஞான சிவாசாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. தலைவரவர்கள் காவிரிக்கரையிலுள்ள சின்னைய பிள்ளை சத்தி ரத்திலிருந்து 24-12-41 இரவு 7½ மணிக்கு மேளவாத்தியம் யானை கொடி குடை முதலிய விருதுகளுடன் ஊர்வலமாக அழைக்கப்பெற்றுத் தமது இருப்பிடமாக அமைக்கப்பட்ட பசுமடத்தை யடைந்தார்கள். 25வ அதிகாலையில் சமாஜத் தினர் சிராப்பள்ளிக் குன்றுடையான் திருக்கோயிலில் வழி பாடுசெய்து திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி மூலமும் உரையும் நான்காம் பதிப்பாக வெளியிட்டனர். 24வ காலையில் சமாஜ ஆயுள் உறுப்பினர் திரு. K. அரங்கசாமி முதலியார வர்கள் இல்லத்தில் ஆரவாரமின்றிச் "சீவக சிந்தாமணி" மூலம் நமது சமாஜப் பதிப்பாக வெளியிடப்பட்டது. 25வ காலையில் திருக்கோயில் வழிபாடும் நூல் வெளியீடும் நிகழ்ந்த பின்னர், தலைவரவர்கள் ஊர்வலமாக மேளவாத்திய கஜ சத்ர சாமராதிகளுடன் மகாநாட்டு மண்டபத்துக்குக் காலை 9 மணிக்கு எழுந்தருளினார்கள். திருநெல்வேலித் தமிழிசை மணி உயர்திரு - சுந்தர ஓதுவார் மூர்த்திகள் கடவுள் வணக் கத் திருபாடல்கள் பலவற்றைப் பாடினவுடன் ராவ்பகதூர் - திரு. சி.எம். இராமச்சந்திரஞ்செட்டியாரவர்கள் அருமையான தமது திறப்புரையை (பக்கம் 1 பார்க்க) நிகழ்த்தி மகாநாட் டைத் திறந்து வைத்தார்கள்.

பிறகு வரவேற்புக்கழகத் தலைவர் ராவ்சாஹேப் - திரு. P. B. கிருஷ்ணசுவாமி ரெட்டியாரவர்கள் தமது வரவேற்புரையை (பக்கம் 7 பார்க்க) வாசித்துத் தலைவரவர்களையும், சொற்பொழிவாளர்களையும், சமாஜத்தினரையும், பிறரையும் அன்போடு வரவேற்றார்கள். பின்பு திரு. R. பஞ்சநதம் பிள்ளையவர்கள் வரவேற்புப் பாக்களை (பக்கம் 10) இனிமையாகப் பாடியளித்தார்கள். பின்பு சமாஜ 36-வது ஆண்டறிக்கை (பக்கம் 12 பார்க்க) சமாஜப் பொதுக்காரியதரிசியால் வாசிக்கப்பட்டு அரநாமமுழக்கத்தோடு அங்கீகரிக்கப்பட்டது.

இதன் பிறகு ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் பல உபநிடதங்களிலிருந்து திரட்டப்பெற்ற பல மேற்கோள்களோடு பல நுட்பமான கருத்துக்களடங்கிய தமது தலைமைப்பேருரையை நிகழ்த்தினார்கள். (இதன் சுருக்கம் அடுத்த இதழில் வெளிவரும்.) கடவுள் வாழ்த்துடன் முதல்நாள் காலைக்கூட்டம் 11 மணிக்கு முடிந்தது.

பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் மகாநாடு கூடிற்று. சைவத் திருவாளர்கள் - சிவக்கவிமணி - சி. கே. சுப்பிரமணிய முதலியார், ஔவை துரைசுவாமிப் பிள்ளை, ந. சிவகுருநாதபிள்ளை, பெருஞ்சொல்விளக்கனார் - அ. மு. சரவண முதலியார் ஆகிய பேரறிஞர்கள் முறையே "திருவெம்பாவை", "சீவக சிந்தாமணியும் சைவமும்", "சிவம்", "வாயுறை வாழ்த்து" என்பனபற்றிப் பேசி, பற்பல அருமையான கருத்துக்களை மிகத்திறமையாக விளக்கிப் பேரவையினரை மகிழ்வித்தார்கள். இச்சொற்பொழிவுகட்கிடையே ஸ்ரீகாழி பெருநிலக்கிழவர் ஸ்ரீமான் திருவேங்கடம் பிள்ளையவர்கள் அடுத்த ஆண்டில் சமாஜ நிறைவுவிழாவைத் தஞ்சை ஜில்லாவின் பிரதிநிதியாக நடத்துவதாக அழைத்தார்கள். சமாஜப் பொதுக்காரியதரிசி இவ்வழைப்பை ஒப்புக்கொண்டு ஸ்ரீமான் திருவேங்கடம் பிள்ளையவர்கட்கு நன்றிகூறி அவர்கள் கருத்து அடுத்த

ஆண்டு விழாவைத் தமது ஊராகிய ஸ்ரீகாழியிலேயே நடத்தி வைப்பதாகும் என்பதையும் வெளிப்படுத்தினர். சொற்பொழிவுகளின் இறுதியில் தலைவரவர்கள் தமது கருத்துரையை விரிவாகத் தெரிவித்த பிறகு கடவுள் வாழ்த்துடன் இரவு 8½ மணிக்கு முதல்நாட் கூட்டம் முடிந்தது.

இரண்டாம் நாட் காலையில் 6 மணிமுதல் 10 மணிவரையில் சைவ இளைஞர் மகாநாடு நடைபெற்றது. இம்மகா நாட்டின் தொடர்ச்சி அன்று பகலிலும் இரவிலும் அடுத்த நாளிலும் நடைபெற்று முடிந்தது. இதன் விவரமான நிகழ்ச்சிகளும் தீர்மானங்கள் முதலியனவும் அடுத்த இதழில் வெளிவரும். உயர்திரு - சுந்தர ஓதுவார் மூர்த்தியவர்களுடைய இசையரங்கு 10 மணிமுதல் 12½ மணிவரையில் நடந்தது. சுமார் 120 பாடல்களை மிக உருக்கமான முறையில் இனிமையாகப் பாடிப் பேரவையினரைப் பேரின்பக்கடலில் திளைக்க வைத்த ஓதுவார் மூர்த்தியவர்களைத் திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் வாயார வாழ்த்தித் தமிழிசையின் பெருமையை விளக்கினார்கள்.

பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் பேரவை தொடங்கிற்று. இவ்வாண்டில் நடந்த சமாஜத் தேர்வுகளில் வெற்றி பெற்ற இளைஞர்கட்குச் சைவப்புலவர் இளஞ்சைவப்புலவர் பட்டங்கள் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுடைய ஆசிர்வாதத்தோடு வழங்கப்பட்டன. பிறகு திருவாளர்கள் - ரா. சண்முகசுந்தரம் செட்டியார், திரு. வி. உலகநாத முதலியார் ஆகிய பேரறிஞர்கள் முறையே "பெரியபுராணம்", "தாயுமானார்" என்பன பற்றிப் பேசி இக்காலத்துக்குத் தேவையான பல விஷயங்களை வற்புறுத்தினார்கள். பிறகு திருவளர்செல்வி - ர. காமாக்ஷியம்மையார், பி. ஏ. அவர்கள் "இறைபணி நிற்றல்" என்னும் பொருள்பற்றிச் சிவஞான போதத்துப் பத்தாஞ் சூத்திரத்திலுள்ள பல நுட்பங்களை விளக்கிப் பேரவையினர் வியக்கத்

தக்க நன்முறையிற் பேசினார்கள். (இச்சொற்பொழிவு அடுத்த இதழில் வெளிவரும்) பிறகு திருவாளர் - ந - மு. வேங்கடசாமி நாவலரவர்கள் "திருநாவுக்கரசர்" என்னும் பொருள்பற்றி மிகுந்த ஆராய்ச்சித் திறம் விளங்கப் பல செம்பொருள்களைக் கோவைசெய்து விளக்கிப் பேசினார்கள். தலைவரவர்கள் தமது கருத்துரையை மிக விரிவாகத் தெரிவித்த பிறகு கடவுள் வாழ்த்துடன் இரண்டாம்நாட் கூட்டம் இரவு $9\frac{1}{2}$ மணிக்கு முடிந்தது.

மூன்றாம்நாட் காலையில் 7 மணிமுதல் $8\frac{3}{4}$ மணிவரையில் சமாஜக் காரியக்கூட்டம் திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் தலைமையில் நடந்தது. 1942ஆம் உத்தியோகஸ்தர்கள் தேர்தலும் சிலதீர்மானங்களும் நிறைவேறின. (இவை அடுத்த இதழில் வெளிவரும்.) பேரவை 9 மணிக்குக்கூடிற்று. திருவாளர் - K. இராமநாதன் செட்டியார், பி. ஏ., பி. எல்., "வாழ்க்கையும் சமயமும்" என்பதுபற்றிப் பேசி, நாம் எளியனவென்று புறக்கணிக்கும் பலவற்றின் அருமையை மிக வசீகரமான முறையில் விளக்கினார்கள். பிறகு திருவாளர் - S. G. சுந்தரம் பிள்ளையவர்கள் "ஓங்காரம்" என்பதுபற்றிப் பேசித் தாம் திருமூலர் திருமந்திரத்துட் செய்துள்ள பல ஆராய்ச்சிப் பொருள்களை மிக வெளிப்படையாகச் சொன்னார்கள். பிறகு சமாஜத்தினருக்கு ஒரு சிறப்பான அறுசுவை விருந்து நடைபெற்றது.

பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் பேரவை கூடிற்று. திரு. T. நல்லசிவன் பிள்ளையவர்கள் "ஆன்ம சக்தி" என்பதுபற்றிப் பேசித் தமது வாழ்க்கையிலிருந்தே பல விஷயங்களை எடுத்துக்கூறி இறுதியில் சமாஜத்துக்கு ஒரு கட்டிடம் தேவையென்றும் சமாஜம் ஒரு சைவ சித்தாந்தக் கல்லூரியைச் சென்னையில் நடத்தவேண்டுமென்றும் தெரிவித்தார்கள். சமாஜக் காரியதரிசி இதற்குப் பதில் கூறுமுகத்

தால், திருவாவடுதுறை ஆதீனத்தினர் உண்மையாகவே உளங்கொண்டால் சென்னையிலேயன்றித் திரிசிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி முதலிய பல இடங்களிலும் கல்லூரிகள் நடத்த முடியுமென்றும், அவ்வாதீனத்தினர் உண்மையாகவே சமாஜத்தின் உதவியைப் பெறுதற்கு எண்ணுவராயின் சமாஜம் வேண்டியவாறெல்லாம் உதவி செய்யுமென்றும் உறுதி கூறினர். பிறகு திரிசிராப்பள்ளியிலுள்ள தருமபுர ஆதீனத்து மௌன மடத்து - ஸ்ரீமத் - சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "சிவோகம்பாவனை" என்பதுபற்றித் தமது ஆதீன சம்பிரதாய நூல்கள் பலவற்றிலுள்ள பாடல்களை மேற்கோள்களாகக்கொண்டு மிக விளக்கமாகப் பேசினார்கள். பிறகு திரு. ப. பாலசுந்தர நயினாரவர்கள் "திருமுறைப் பெருமை" என்பதுபற்றிப் பேசித் திருமுறைகள் ஐந்தொழில் புரிந்த வரலாறு முதலியவற்றை விளக்கினார்கள். பின்பு தலைவர், திறப்பாளர்கள், வரவேற்புக் கழகத்தினர், சொற்பொழிவாளர் முதலியோரடங்கிய புகைப்படங்கள் இரண்டு எடுக்கப்பட்டன. பிறகு திருவாளர்கள் - மு. நடேச முதலியார், எஸ். துரைசாமி ஐயர் ஆகிய பேரறிஞர்கள் முறையே "புறத்திற் சைவம்", "குருலிங்க ஜங்கமம்" என்பனபற்றி மிகுந்த ஆராய்ச்சித்திறம் விளங்கப் பேசினார்கள். பின்பு சமாஜப் பொதுக்காரியதரிசி பாதிரிப் புலியாகவும் உள்ளங்கவர் கள்வராகவும் விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகட்கும், திறப்பாளர்கள், வாழ்த்தாளர், இளைஞர் தலைவர், சொற்பொழிவாளர்கள், இசைவாணர், வரவேற்புக் கழகத்தினர், பேரவையினர் ஆகிய அனைவருக்கும் நன்றிகூறினார். பிறகு வரவேற்புக்கழகக் காரியதரிசி ஸ்ரீமான் N. P. கலியாணசுந்தர முதலியாரவர்கள் சமாஜப் பொதுக் காரியதரிசிக்கும், வரவேற்புக் கழகத்தில் ஓவாது உழைத்த அன்பர்கட்கும் பிறருக்கும் நன்றிகூறினர்.

பிறகு திரு. தி. கி. நாராயணசுவாமி நாயுடு அவர்கட்குப் பட்டமளித்துப் பாராட்டி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் ஆசீர்வதித் தனர். (இதன்விவரம் இளைஞர் மகாநாட்டு நடவடிக்கை களோடு அடுத்த இதழில் வெளிவரும்). திரு. நாயுடு அவர்கள் தமது நன்றியை அனைவருக்கும் தெரிவித்தார்கள். பிறகு திவான்பகதூர் - ஸ்ரீமான் - T. M. நாராயணசுவாமிப் பிள்ளை யவர்கள் இம்மகாநாட்டினை மனமார வாயார வாழ்த்தினார்கள். (இவ்வாழ்த்துரை அடுத்த இதழில் வெளிவரும்). இதன் பிறகு ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் சர்க்கரைப்பந்தரிற் றேன்மாரி பொழிந்தா லொப்பத் தமது கருத்துரையைத் தெரிவித்துச் சமாஜத்தை யும் பேரவையினரையும் வாழ்த்தி முடிபுரை கூறிய பின்னர் கடவுள் வாழ்த்தொலி முழக்கத்தோடு இரவு 11¼ மணிக்கு இம்மகாநாடு இனிது நிறைவெய்தியது. சுபம்.

வாழ்க சீரடியா ரெல்லாம்.

## தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின்

# 58-ம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சி

[ந. சிவகுருநாத பிள்ளை]

இவ்விழா சென்ற டிஸம்பர் 27, 28, 29, 30-ஆம் நாட் களில் இதன் அடியிற்கண்ட வண்ணம் நடைபெற்றது.

முதல்நாள் (27-12-41) காலை தேவாரத் திருமுறைப் பாராயணத்துடன் திருவீதி வலம்வந்து சிவாலய, மடாலய வழிபாடு செய்யப்பெற்றது. மாலை பேரவை தொடங்கப் பெற்றது. திருநெல்வேலி - வழக்கறிஞர் - உயர்திரு - P. ஆவுடையப்ப பிள்ளையவர்கள், B.A., B.L. விழாப் பேரவை

யைத் திறந்து வைத்தார்கள். இலங்கை அரசாங்க சபை உறுப்பினரும், யாழ்ப்பாணம் - பரமேஸ்வர காலேஜ் தலைமை ஆசிரியருமான உயர்திரு - சு. நடேச பிள்ளை, B. S. C., B.A., B.L., F. R. G. S. அவர்கள் தலைமை தாங்கியுள்ளார்கள். அவைத் தலைவரவர்களால் "தற்காலத்தில் உலகத்தை பேரல்லலிற்படுத்தும் போருக்குக் காரணம் மக்களிடையே சமய அறிவும், கடவுட்பத்தியும் குன்றிக், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்னும் நாத்திக உணர்வுமேற்பட்டிருப்பதே யாகும். ஆதலின் நமது சைவ மக்கள் சமய ஒழுக்கத்தைப் பொன்னேபோற் போற்றி ஒழுகி வருவராயின் எவ்வித அல்லலுக்கும் உட்படாமல் இனிது வாழலாம்"என்பது முதலிய அரும்பெரும் பொருள்கள் அடங்கிய தலைமைப் பேருரை நிகழ்த்தப் பெற்றது. அதன் பின்னர்க் காஞ்சிபுரம் மெய்கண்டார் கழக அமைச்சர் உயர்திரு - K. வச்சிரவேல் முதலியாரவர்கள், B.A., L. T., திருவாவடுதுறை ஆதீன வித்துவான்-உயர்திரு. வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளையவர்கள், நாகர் கோவில் - திருநெறித் தொண்டர் குழாம் தலைவர் உயர்திரு - பண்டிதபூஷணம் - K. ஆறுமுகம் பிள்ளையவர்கள், சென்னை திருப்புகழமிர்தம் ஆசிரியர் - குகஸ்ரீ கிருபானந்தவாரியவர்கள், இவர்களால் முறையே "இறைவன் வழிபாட்டின் இன்றியமையாமை", "திருவெம்பாவை", "நன்னெறி காத்த நாதனார்", "முட்டையும் - முரட்டுப் புலவனும்" என்னும் சொற்பொழிவுகள் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்ச் செய்யப்பட்டன. அவைத் தலைவரவர்களின் சொற்சுருங்கப் பொருள் விளங்கக்கூறிய முடிவுரைக்குப்பின் முதல் நாள் கூட்டம் முற்றுப்பெற்றது.

இரண்டாம் நாள் (28-12-41) காலை உயர்திரு - சு. நடேச பிள்ளையவர்கள் தலைமையில் மீண்டும் பேரவை

தொடங்கப் பெற்றது. உயர்திருவாளர் - குலசை. வீ. சிவசுப் பிரமணிய பிள்ளையவர்கள், வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளையவர்கள் இவர்களால் முறையே "ஏனாதிநாத நாயனார் சரித்திரம்", "திராவிட மாபாடியம்" என்னும் இருபொருள்களைப்பற்றிய சொற்பொழிவுகள் நனி விளங்க நிகழ்த்தப்பெற்றன. திருவாவடுதுறை ஆதீன வித்துவான்-உயர்திரு-வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளையவர்களின் தண்டமிழ் வடமொழிப் பயிற்சியையும், அவ்விருமொழிகளிலுமுள்ள இலக்கணம், இலக்கியம், தருக்கம், சமய முதலிய நூல்களின் ஆராய்ச்சித் திறனையும் அறிந்த சபையினர் அவர்கட்குப் "பல்கலைப் புலவர்" என்னும் பட்டம் அளித்துள்ளார்கள். அவைத் தலைவரவர்கள் இருசொற்பொழிவுகளுக்கும் நுண்பொருள் பொதுளிய முடிவுரை கூறியுள்ளார்கள்.

தலைவரவர்கட்கும், சொற்பொழிவாளர்கட்கும் நன்றி கூறுதலுடன் காலைக் கூட்டம் முடிவுபெற்றது.

மாலை மீண்டும் பேரவை தொடங்கப் பெற்றது. சென்னை 'சித்தாந்தம்' பத்திராசிரியரும்,இராயப்பேட்டை சாது அச்சுக்கூட அதிபருமான உயர்திரு-திரு.வி.உலகநாத முதலியாரவர்கள் தலைமைதாங்கி யுள்ளார்கள். அவர்களால் எழுதி அச்சிட்டுக் கொண்டுவந்த தலைமைப்பேருரை வாசிக்கப்பட்டது. பின்னர் உயர்திருவாளர்கள், K. வச்சிரவேல் முதலியாரவர்கள், B.A., L.T., (காஞ்சிபுரம்), ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் B.A., B.L., (அட்வோகேட், திருமயிலை), வித்துவான் (ஔவை) A. S. துரைசாமி பிள்ளையவர்கள், தேவகோட்டை-பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியாரவர்கள், நாகர்கோவில்-பண்டித பூஷணம் - கெ. ஆறுமுகம் பிள்ளையவர்கள் இவர்களால் முறையே "சித்தாந்த சைவநூல்கள்", திருநீறு", "சேக்கிழார் செய்யுட்சிறப்பு", "சைவ

மங்கையர்", "மன்னுயிரும் மறுபிறப்பும்" என்னும் பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகள் செய்யப்பெற்றன. அவைத் தலைவரவர்கள் ஒவ்வொரு சொற்பொழிவின் முடிவிலும் சுருங்கியதும், தெளிவானதுமான முடிவுரை கூறினார்கள்.


மூன்றும்நாள் (29–12–41) காலை சைவ இளைஞர் கூட்டம் தொடங்கப் பெற்றது. ஔவை-வித்துவான் - உயர்திரு A. S துரைசாமி பிள்ளையவர்கள் அவைத்தலைமை தாங்கியுள்ளார்கள். தலைவரவர்களால் சைவ சித்தாந்தத்தின் உயர்வொப்பில்லா உண்மைகளும் சைவ இளைஞர்கள் அச்சமயத்தைக் காப்பதற்கும் வளர்ப்பதற்கும் விரைந்து எழுதல் வேண்டும் என்பன முதலியனபற்றி வீரஞ் செறிந்த பொன்மொழிகளால் பேருரை நிகழ்த்தப்பெற்றது. உயர்திருவாளர்கள்-வித்துவான் - ந. சேது ரகுநாதன் அவர்கள். (தலைமைத் தமிழாசிரியர், மந்திரமூர்த்தி உயர்நிலைப்பள்ளி, திருநெல்வேலி) "புறநானூறும் பின்னூல்களும்" என்னும் பொருள் பற்றியும், சு. நல்லகண்ணுப் பிள்ளையவர்கள் (அதிபர் ஸ்ரீ கண்ணப்பர் திருமடம் திருநெல்வேலி) "ஸ்ரீகண்ணப்பர் புகழ்" என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவு செய்துள்ளார்கள். அவைத் தலைவரவர்களால் நீண்ட முடிப்புரை கூறப்பெற்றுச் சைவ இளைஞர் கூட்டம் இனிது முற்றுப் பெற்றது.

மாலை உயர்திரு - திரு. வி. உலகநாத முதலியாரவர்கள் தலைமையில் மீண்டும் பேரவை தொடங்கப் பெற்றது. தேவகோட்டை-பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியாரவர்கள், வித்துவான் - உயர்திரு. ஔவை. A.S. துரைசாமி பிள்ளையவர்கள், தூத்துக்குடி - சென்ற் சேவியர்ஸ் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்-வி. பரிமேலழகரவர்கள், திருவாவடுதுறை ஆதீன வித்துவான்-உயர்திரு - "பல்கலைப்புலவர்" சிதம்பர ராமலிங்கம் பிள்ளையவர்கள், திருநெல்வேலி வித்துவான்-உயர்திரு ந. சேதுரகுநாதன் அவர்கள், குலசை - திருவாளர் - வீ. சிவசுப்பிரமணிய பிள்ளையவர்கள் இவர்களால்

முறையே "ஞான உலா", "நால்வர் காட்டிய நன்னெறி", "பண்டார மும்மணிக் கோவை", ஸ்ரீமாதவச் சிவஞான யோகிகள் அருளிய பிரபந்தங்கள்", "சேனுயர் மருத மாணிக்கத் தீங்கனி", "தமிழின் பெருமை" என்னும் பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகள் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்ச் செய்யப்பட்டன. தலைவரவர்கள் ஒவ்வொரு சொற்பொழிவுக்கும் சிறந்த பொருள்கள் அடங்கிய முடிப்புரை கூறியுள்ளார்கள்.

சொற்பொழிவுகளின் இடையிடையே உயர்திரு - தமிழிசைமணி சுந்தர ஓதுவார் மூர்த்திகள் தேவாரக் குழாத்தினராலும், சபையின் பாடசாலை மாணவர் மாணவிகளாலும் இன்னிசையுடன் தமிழ்மறை ஓதப்பட்டன. ஒலிபெருக்குக் கருவி அமைக்கப்பட்டிருந்ததால் ஆயிரக்கணக்கான மக்கள் பந்தலிலும் வெளியிலும் கூடியிருந்து அன்புடன் சொற்பொழிவுகள் கேட்டு இன்புற்றார்கள். நன்றி கூறலுக்குப் பின் அரகாம முழக்கத்துடன் 58 ஆம் ஆண்டு நிறைவு விழாப் பேரவை அமைதியாகக் குதூகலத்துடன் இனிது முற்றுப் பெற்றது.

நான்காம் நாள் (30-12-41) ஷை விழாவின் சார்பாகச் சைவமகளிர் கூட்டம் நடைபெற்றது. சுமார் இருநூறு பெண்மணிகள் கூட்டத்திற் கலந்து கொண்டார்கள். பாளையங்கோட்டை-பண்டிதை - திருவாட்டி திருவரங்க நீலாம்பிகையம்மையார் தலைமை தாங்கியுள்ளார்கள். தலைவியவர்கள் சைவமகளிர் சமயத் தொண்டில் ஈடுபட்டு உழைத்தல் வேண்டும் எனப் பேசினார்கள். பால பெண்மணிகள், சமயம், ஒழுக்கம், சரித்திரம் சம்பந்தமான பொருள்கள் பற்றிப் சொற்பொழிவு செய்துள்ளார்கள். கூட்ட முடிவில் இடையில் நின்று போன "ஸ்ரீபாகம் பிரியாள் மாதர் சங்கத்தை" மீண்டும் முறையாய் நடத்தி வரவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. நன்றி கூறலுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.



வித்துவான் - மூத்து - சண்முகம் பிள்ளையவர்கள்

இவ்வாண்டில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ஞாபகார்த்தப் பரிசு ரூபா ஆயிரம் பெற்றவர்.

# சமாஜ வெளியீடுகள்

# CATALOGUE OF SAMAJAM BOOKS

| | ரூ. | அ. |
|---|---|---|
| சம்பந்தர் தேவாரம் (அரும்பொருளகராதியுடன்) .... | 1 | 4 |
| அப்பர் தேவாரம் ,, ... | 1 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் .... | 0 | 12 |
| திருவாசகம் ,, .... | 0 | 10 |
| ,, (பல ஆராய்ச்சி அகராதிகளுடன்) .... | 0 | 12 |
| திருவாசகம் மூலம் ... | 0 | 2½ |
| திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு—குறிப்புரையுடன் .... | 0 | 9 |
| ௮, ௯ திருமுறைகள் ,, .... | 1 | 2 |
| திருமந்திரம் — (இரண்டாம் பதிப்பு) .... | 1 | 0 |
| பதினோராந் திருமுறை ,, .... | 0 | 11 |
| பெரியபுராணம் ,, .... | 1 | 6 |
| மெய்கண்டாரும் சிவஞான போதமும் .... | 0 | 8 |
| சங்கநூற்புலவரகராதி .... | 0 | 1 |
| தலயாத்திரைப் படம் .... | 0 | 1 |
| திருப்புகழ் (அருணகிரியார் அருளியவை முற்றும்) | 3 | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை ... | 0 | 10 |
| சங்க இலக்கியம் in 2 Vols. .... | 3 | 8 |
| சீவக சிந்தாமணி .... | 1 | 8 |
| சிவஞானபாடியம் .... | 1 | 0 |
| சிவஞானபோதச் சிற்றுரை .... | 0 | 8 |
| சிவஞான சித்தியார் உரை .... | 0 | 12 |
| சிவப்பிரகாசம் மூலமும் உரையும் .... | 1 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் .... | 1 | 0 |
| சித்தாந்த சாத்திரம் மூலமும் உரையும் .... | 3 | 4 |

தபாற்கூலி, பார்சல் செலவு முதலியன வாங்குவோர் செலுத்த வேண்டும். முன்பணம் அனுப்புக.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.